விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 தை 05 ஞாயிற்றுக்கிழமை (18.01.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 030








# பயங்கரவாதம் இருக்கும் வரை இராணுவ நடவடிக்கை தொடரும்

## சிவ்சங்கர் மேனனிடம் ஜனாதிபதி உறுதிபடத் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் பயங்கரவாதம் இருக்கும் வரை தனது அரசு இராணுவ நடவடிக்கையைத் தொடருமென தன்னைச் சந்தித்த இந்திய வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனனிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதிபடத் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)



## என்னைக் கொல்வதற்கான சூழல் உருவாக்கப்பட்டு வருகிறது

### பொலிஸ்மா அதிபருக்கு அறிவிப்பு; மங்கள எம்.பி. கூறுகிறார்



(கொழும்பு)

வடக்கின் யுத்தத்துக்குள் மறைந்து கொண்டு தெற்கில் ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைப்பதற்கும் மனித சுதந்திரத்தைப் பறிப்பதற்கும் அரசாங்கம் திட்டங்களை முன்னெடுத்துள்ளது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர எம்.பி தெரிவித்தார்.

என்னைக் கொலை (14ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு,உடையார்கட்டில் படையினர்-புலிகள் கடும் மோதல்

(கொழும்பு)

சுண்டிக்குளம் மற்றும் முல்லைத்தீவு நகருக்குத் தெற்கே அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் மீது நேற்று விமானத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் புதுக்குடியிருப்பு, உடையார்கட்டுப்பகுதிகளில் நேற்று புலிகளுடன் மோதல்கள் இடம் பெற்றதாகவும் (14ஆம் பக்கம் பார்க்க)

# வன்னிப் போர் நிலைமை எங்களுக்குத் தெரியும் தமிழ் மக்களுக்கு ஏற்ற தீர்வை இந்தியா ஏற்படுத்தும்

## சிவ்சங்கர் மேனன் உறுதிபடத் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே வன்னிப்பெருநிலப் பரப்பில் நடைபெற்றுவரும் கடுமையான போரில் பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற இழப்புக்கள் மற்றும் பாதிப்புக்கள் தொடர்பாக இந்தியாவுக்கு முழு விபரமும் தெரியும் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் செயலாளர் சிவ்சங்கர் மேனன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்றவாறு அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதற்கும் இந்திய மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் சிவ்சங்கர் மேனன் உறுதியளித்துள்ளார்.

கொழும்பு வந்துள்ள சிவ்சங்கர் மேனன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுவைச் சந்தித்து கலந்துரையாடியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற சந்திப்பில் சிவ்சங்கர் மேனனுடன் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் மற்றும் தூதரகத்தின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா. சம்பந்தன், நாடாளுமன்றக் குழுவின் பிரதித் தலைவர் மாவை.சேனாதிராஜா, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் (14ஆம் பக்கம் பார்க்க)



## இராமநாதபுரம் படையினர் வசம்

இராமநாதபுரத்தை நேற்றுக் கைப்பற்றியிருப்பதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி -இரணைமடு ஆகிய இடங்களுக்கு அடுத்தபடியாக விடுதலைப் புலிகளுடைய முக்கியதளமாக இராமநாதபுரம் விளங்கியதாகவும் அந்த இடத்தையும் இராணுவத்தினர் தற்போது கைப்பற்றியிருப்பதையடுத்து புலிகள் மேலும் பின்வாங்க நேரிட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. (ந-14)

## ஏமாற்றம் தரும் சிவ்சங்கர் மேனனின் பயணம் நாட்டையே உலுக்கும் முடிவை எடுப்போம்

### டாக்டர் ராமதாஸ் கர்ச்சிப்பு;உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு திருமாவளவனிடம் கோரிக்கை

(சென்னை)

இந்திய இலங்கை நாடுகளுக்கிடையிலான உறவு நெருக்கடிகளையும் சோதனைகளையும் தாண்டி காலத்தை வென்று நிற்கின்றது என்று இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் கூறியிருப்பது அதிர்ச்சியாக உள்ளது என்றும் இந்தப் பின்னணியில் அடுத்தது என்ன என்பது குறித்து இலங்கைத் தமிழர் நலனில் அக்கறை உள்ள அனைவரும் கலந்து பேசி முடிபெடுக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் இராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


அந்த முடிவு நாட்டையே அசைக்கும் முடிவாக, உலுக்கும் (14ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இந்தியாவின் நிலைப்பாட்டையே இலங்கை அரசு முன் நகர்த்துகிறதா?

**தினமணி நாளேட்டின் வார ஏடான தமிழன் எக்ஸ்பிரஸில் வெளிவந்த கட்டுரை இங்கு தரப்படுகிறது**

இலங்கை இனப் போரின் திடீர் திருப்பமாக **ஜனாதிபதி** மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு, தனது பங்கிற்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது தடை விதித்துள்ளது. இது இனப்போர் துவங்கிய 30 ஆண்டுகளில் அந்



நாட்டு அரசு விதித்துள்ள மூன்றாவது தடை உத்தரவாகும். இதற்கு முன்பு, 1998ஆம் ஆண்டு விதித்த தடை, 2002ஆம் ஆண்டு கையெழுத்து இடப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஒட்டி விலக்கிக்கொள்ளப்பட்டது.

போர் முகத்தில் விடுதலைப் புலிகளின் பின்னடைவிற்குப் பின், அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் அரசியல் கட்சிகளின் எண்ணத்தில் மாறுதல் தெரிகிறது. பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸ், தமிழ் தேசிய கூட்டணியின் தலைவர் பழ.நெடுமாறன் ஆகியோர் இதுவரை தனி ஈழம் என்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கருத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வந்துள்ளனர். ஆனால் தற்போதோ, இலங்கை இனப் பிரச்சினைக்கு சமஷ்டி அரசு தீர்வாக அமையலாம் என்று கருத்து தெரிவித்து உள்ளனர். இதற்கு மாறு தலான கருத்து விடுதலைப் புலிகள் இயக்கத் திடமிருந்தோ, அவர்களது முன்னணி அமைப்புகளிடமிருந்தோ வரவில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரையில், 2001ஆம் ஆண்டு கையெழுத் திட்ட ஒஸ்லோ ஒப்பந்தத்திலும், பின்னர் இலங்கை அரசுடன் செய்து கொண்ட போர் நிறுத்த ஒப்பந்தத்திலும் சில அடிப்படைக் கொள்கை மாற்றங்களை ஏற்றுக்கொண்டனர். அதன்படி, தனிநாடு திட்டம் பின்னுக்குத் தள்ளப் பட்டது. ஒன்றுபட்ட இலங்கையில் தமிழ் இனத்தின் நியாயமான அபிலாஷைகளை அரசியல் பேச்சுவார்த்தை மூலம் பூர்த்தி செய்யும் வகையில் தீர்வு காண்பதாக அந்த இயக்கம் **ஒப்புக்கொண்டது.** அதன் இயற்கை வடிவம் சமஷ்டி அரசாக இருக்கவேண்டும் என்று அப்பொழுது கருதப்பட்டது.

ஆனால் கடந்த 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை அரசு, போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஒருதலைப்பட்சமாக நிராகரித்தது. இன்னும் சொல்லப் போனால், அந்த அரசு நிராகரிப்பின் முதலாவது ஆண்டு நிறைவை ஒட்டித்தான் இலங்கை அரசு, விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீண்டும் இப்போது தடை செய்துள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தம் தற்போது நிலுவையில் இல்லாதபோது, அதன் அடிப்படையிலான ஒன்றுபட்ட இலங்கை என்ற கோட்பாட்டை, விடுதலைப் புலிகள் இயக்கம் இன்னும் ஏற்றுக் கொள்கிறதா? அவ்வாறு இருந்தால் மட்டுமே, அதன் அடிப்படையிலான சமஷ்டி அரசு திட்டத்தை அந்த இயக்கம் ஏற்றுக்கொள்ள வாய்ப்பு உள்ளதாக எண்ணுவதற்கு இடம் இருக்கும். ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கமும் சரி, அவர்களை ஆதரிக்கும் அரசியல் கட்சிகளும் சரி, போர் நிறுத்தம் ஏற்பட்டால் மட்டுமே பேச்சுவார்த்தையில் பங்கெடுப்போம் என்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளனர்.

இந்தப் பின்னணியில், பேச்சுவார்த்தை இல்லாமல் இலங்கை அரசு ஒருதலைப்பட்சமாக ஏதாவது அரசியல் தீர்வை அளித்தால், அதனை அந்த நாட்டில் அல்லலுறும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வார்களா? எது எப்படியோ, இவ்வாறு ஒரு தீர்வுதான் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ளது.அதனை அங்குள்ள மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்குள்ள தமிழ் மக்கள் முழுவதுமாக நிராகரித்து விட்டார்கள் என்று சொல்லி விடமுடியாது.


ஒரு அரசியல் தீர்வையும், அது சார்ந்த அரசியல் திட்டத்தையும் இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வதற்கான மனநிலை அங்கு உருவாகவேண்டும். அப்பாவி மக்கள் அங்கு அல்லலுறுவது நிறுத்தப்பட்டாலே அதற்கான சூழ்நிலை உருவாகும். தொண்ணூறுகளில் சந்திரிகா குமாரதுங்காவையும், 2005ஆம் ஆண்டு **ஜனாதிபதி** தேர்தலில் ரணில் விக்கிரம சிங்கவையும் தமிழ் இன வாக்காளர்கள் ஆதரித்ததாக எண்ண இடம் இருக்கிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ராணுவ பலத்தைக் குறைத்தால் மட்டுமே, அவர்களது அச்சுறுத்தலில் இருந்து தமிழ் மக்களை விடுவிக்க முடியும் என்று ராஜபக்ஷ அரசு கருதுகிறது. அதனால்தான் தனது ராணுவ நடவடிக்கை என்றும் அந்த அரசு கூறிவருகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கம் என்றல்ல, இலங்கை சுதந்திரம் அடைந்து, **தந்தை** செல்வநாயகம் தமிழ் அரசு கட்சியைத் துவங்கிய காலம் முதல், அந்த நாட்டிலுள்ள தமிழ் இன அரசியல் தலைவர்கள் போராட்ட மனப்பான்மையுடன் போட்டி மனப்பாங்கையும் வளர்த்து வந்துள்ளனர். அது தவிர்க்க முடியாத ஒன்றும் கூட. நமது நாடும், நமது மாநிலமும் அதற்கான ஓர் எடுத்துக்காட்டு.

ஏன், மிதவாத அரசியலுக்கு அப்பாற்பட்டு, அங்குள்ள தமிழ் இளைஞர்கள் துப்பாக்கி தூக்கும் நிலைக்குதள்ளப்பட்ட போதும்கூட, சகோதரச் சண்டையிலேயே அதிகம் பேர் மடிந்துள்ளனர். தொடர்ந்து மடிந்தும் வருகின்றனர். என்னதான் விடுதலைப் புலிகள் இயக்கம் தடாலடியாக முயற்சித் தாலும், அவர்களாலும் தமிழ் இனத்திலுள்ளே உள்ள பல்வேறு அரசியல் கட்சி களையும், ஆயுதக் குழுக்களையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வர முடியவில்லை.

இன்னும் சொல்லப்போனால், விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்தே கருணா குழு, அதிலிருந்தே **பிள்ளையான்** குழு என்று பிரிந்து சென்றுள்ளன.



இலங்கையிலுள்ள தமிழ் மக்களைப் பொறுத்தவரை, தங்களது அபிலாசைகளை ஏற்றுக்கொள்ளும் சிங்கள அரசியல் தலைவர்களை ஏற்றுக் கொள்ளத் தயங்கியது இல்லை. 1976 ஆம் ஆண்டு, தனிநாடு கேட்டு வட்டுக்கோட்டை தீர்மானத்தை ஆதரித்து, அடுத்த வருடமே நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் ஏகமனதாக வாக்களித்தார்கள் என்றே சொல்லவேண்டும். என்றாலும், ஐந்து வருடங்களுக்குப் பின்னர் 1982ஆம் ஆண்டு நடைபெற்ற **ஜனாதிபதி** தேர்தலில், தமிழ்க் கூட்டணி வேட்பாளரான குமார் பொன்னம்பலம் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் மட்டுமே 40 சதவீத வாக்குகளை மட்டும் பெற்று முதலிடத்தில் வர முடிந்தது.

இலங்கை தமிழ் இனத்தின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் விதத்திலான ஓர் அரசியல் தீர்வு எட்டப்படவேண்டும். அதிகாரப் பகிர்வு என்பது அந்த அபிலாசைகளின் முக்கிய வடிவமாக உருப் பெற்ற பிறகு, சமஷ்டி முறையிலான கூட்டா ட்சி தத்துவமே அதற்கு அடிப்படையாக அமையமுடியும். அதற்கு வழிகாட்டுவதே 1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தமும், அதன் அடிப்படையிலான இலங்கை அரசியல் சட்டத்தின் 13வது திருத்தமும் என்றாலும், அன்று தொடங்கி இன்று வரையிலான மாறிவரும் சூழலில், அவை இரண்டும் நல்லதொரு துவக்கமாகவே அமைய முடியும்.

இதுவே இந்திய அரசின் நிலைப்பாடாகவும் இருக்கிறது. அதனை ஏற்றுக்கொள்ளும் விதத்திலேயே **ஜனாதிபதி** ராஜபக்ஷவும் அனைத்துக் கட்சி பிரதிநிதிக் குழுவை அமைத்துள்ளார். தற்போது அந்தக்குழு அளிக்க இருக்கும் திட்டத்தின் அடிப்படையிலேயே இலங்கை தமிழர்களின் எதிர்காலமும், அவர்களுடைய அரசியல் முடிவுகளும் இருக்கும் என்பதே உண்மை.. இதனை இலங்கை அரசும், **ஜனாதிபதி** ராஜபக்ஷவும் உணர்ந்து செயல்பட்டாலே, பாதிக் கிணறுக்கும் மேலாகவே தாண்டியது மாதிரிதான்!


24 வது ஆண்டில் கால் பதிக்கும் ...



**கலாலயா**

பயிற்சியகம்

**பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.**

**மகளிருக்கான துரித 3 மாதகால பயிற்சிகள்**

- **கேக் ஐசிங், மார்ச்சீனி மலர்கள் (Sugar Flowers). Fondant ஐசிங்.**
- **உணவு தயாரித்தல் :** பலவகையான உணவுகள், கேக் வகைகள், சிற்றுண்டிகள், சர்பத், ஐஸ்கிறீம், புடிங், சுப், மேசை அலங்காரம் செய்தல்.
- **கூந்தல் அலங்காரம் :** 50 வகையான கொண்டைகள் போடுதல், **Dressing** செய்தல். Facial: முக அழகுக்கலையும் மணப்பெண் அலங்காரமும், கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல் (Manicure, Pedicure), முடி அயன் செய்தல், **V-Cut, U-Cut,Step** வழிவில் முடி வெட்டுதல்.
- **பப்றிக் வர்ணம் தீட்டுதல் :** துணிகளில், கண்ணாடியில், சேலையில் (Saree Painting).
- **கை வேலை :** கம்பளி நூல் வேலை, பஞ்சில் பொம்மைகள் செய்தல் (Soft Toys) கழிவுத் துணிகளில் வேலைப்பாடுகள், றிபன் வேலை, மற்றும் பல.
- **பூ வேலை :** கடதாசியினாலும் துணியினாலும் Paper Ribbon ஆலும் மலர்கள் செய்தல், மலர்ச் செண்டுகள் (Bouquet) செய்தல், கபாயா றிபன் மலர்கள் செய்தல்.
- Saree Work : சேலையில் முத்துக்கள், சுயிக்கின்ஸ் கட்டுதல், Net Work செய்தல்.
- தையல் அடிப்படை அறிவு அற்றவர்களுக்கான **6 மாதகால உடை தயாரித்தல் (தையற் கலை) பயிற்சிகள்** (அடிப்படைத்தையலுடன் குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான ஆடைகள், சாரிபிளவ்ஸ் தைத்தல்)
- தையல் தெரிந்தவர்களுக்கான **இருவாரகால** சாறி பிளவுஸ், சுரிதார், கவுண், சட்டை, Skirts தைத்தல்.
- **இருவாரகால** சேலையில் வர்ணம் தீட்டல் (Saree Painting) வகுப்புகள்.

➡ 3 பாடங்களுக்கு மேல் பயில்பவர்கள் தவணைமுறையில் கட்டணம் செலுத்தலாம்.
➡ இப் பயிற்சிக்கு வயதெல்லை கிடையாது.
➡ பயிற்சிகள் முடிந்தபின்னர் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**சனி ஞாயிறு புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 25-01-2009**
**கிழமைநாள் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 26-01-2009**

*மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.*

**பதிவாளர்.**


# 100 இலங்கைத் தமிழர்களை பிரித்தானியா நாடு கடத்தியது

(லண்டன்)

பிரித்தானியாவில் அகதிப் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட சுமார் நூறு தமிழர்கள் அந்நாட்டு அரசாங்கத்தினால் இலங்கைக்கு நேற்று முன்தினம் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

பிரித்தானியா உள்துறை அமைச்சின் ஏற்பாட்டில் சிறப்பு விமானத்தில் இவர்கள் ஏற்றப்பட்டு துபாய் வழியாக இலங்கைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டவர்களில் இளை ஞர்கள், பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், சிறுவர்களும் உள்ளடங்குவதாக அங்கி ருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக் கின்றன.

அதேநேரம் ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளிலும் அகதிப் புகலிடம் கோரிக்கை நிரா்காரிக்கப்பட்டவர்கள் பலர் துபாய் வழியாக இலங்கைக்கு நாடுகடத்தப் பட்டுவருவதாக ஐரோப்பிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் உள்நாட்டு மோதல் தீவிரமடைந்துள்ள நிலையிலும் அகதிப் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட இலங்கையர்கள் நாடுகடத்தப்படுவது லண்டனில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நாடுகடத்தல் சம்பவத்தினால் பிரித்தானியாவில் உள்ள அகதிப் புகலிடக் கோரிக் கை நிராகரிக்கப்பட்ட ஏனைய இலங்கை யர்கள் பெரும் அச்சநிலையில் வாழ்ந்து வருவதாக லண்டனில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ந-5)

# மணவாளக் கோல விழா


(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் மணவாளக் கோல விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சங்காபி ஷேகக் கிரியைகள் உடன் ஆரம்பமாகவுள்ளது.

பிற்பகல் 4 மணிக்கு விசேடபூசை,விசேட மேளக் கச்சேரி, வசந்த மண்டப பூசை, திருவூஞ்சல் விழா என்பனவும் இடம்பெற வுள்ளது.

தொடர்ந்து கருணாகரப் பிள்ளையார் பூந்தண்டிகையில் வீதி வலம் வருவதனையும் காணலாம்.

அத்துடன் நாதஸ்வர வித்துவான் ச. இராசன் குழுவினர், கலாபூஷணம் கே. ஆர்.சுந்தரமூர்த்தி குழுவினர் வழங்கும் நாதஸ்வர இசையும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)



மட்டுவில் தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் நடைபெற்ற முறைசாராக் கல்விப் பிரிவினின் கண்காட்சியில் அதிபர் வேசுந்தரலிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவதையும், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி, உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சிறிஸ்காந்தமூர்த்தி, முன்னாள் அதிபர் க.துரைரத்தினம் ஆகியோர் அமர்ந் திருப்பதையும் படத்தில் காணலாம்.

# பாதிக்கப்பட்டோருக்கு வீடுகள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

சமூக மீட்பு மீள்நிர்மாண பங்காண்மைத் திட்டத்தின் உருவாக்கத்தில் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்க சம்மேளன (ஐ.எவ்.ஆர்.சி) நிதி உதவியுடனும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் (எஸ்.எல்.ஆர்.சி) ஒத்துழைப்புடனும், யாழ்ப்பாண ஐக்கிய நாடுகள் வதிவிட நிறுவனத்தினால் (யு.என்.கபிடாட்) சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்காக பருத்தித்துறை மற்றும் மருதங்கேணி பிரதேச செயலக பிரிவுகளில் - அதாவது அல்வாய் மேற்கு, குடத்தனை மற்றும் பொலிகண்டி மேற்கு ஆகிய பிரதேசங்களில் அமைக் கப்பட்ட வீடுகளை சம்பிரதாய பூர்வமாக கையளிக்கும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

மேற்குறிப்பிட்ட பிரதேசங்களிலுள்ள சமூக அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் நடை பெறும் இந்நிகழ்வில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இவ் வீடுகளை சம்பிரதாய பூர்வமாக பயனாளர்களிடம் கையளிக்கவுள்ளார் என்பதை யாழ். செஞ் சிலுவைச் சங்கத் தலைவர் வி.கே.கணேச லிங்கம் அறியத் தந்துள்ளார். (ஓ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 500 | 600 |
| தக்காளி | - | - |
| அவரை | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 75 |
| கோவா | 140 | 140 |
| கரட் | 140 | 160 |
| பூசணி | 80 | 80 |
| புடோல் | 80 | 100 |
| வாழைக்காய் | 160 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 150 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 |
| பாகற்காய் | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 |
| கரணைக் கிழங்கு | 30 | 50 |
| பயிற்றங்காய் | 160 | 160 |
| லீக்ஸ் | 200 | 200 |
| போஞ்சி | 240 | 220 |
| கீரை - 1 பிடி | 25 | 20 |
| தேசிக்காய் | 160 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 |

(7)

# தைப்பொங்கல் விழா

(சித்தன்கேணி)

இந்து கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால் வலிகாமப் பிரதேசத்தில் நடத் தும் தைப்பொங்கல் விழா சித்தன்கேணி ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு த.பிரதீஸ்வரன் தலைமை யில் நடைபெறவுள்ளது.இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலய அதிபர் செல்வி ஜெயராணி நாகலிங்கம் மற்றும் சிறப்பு விருந்தினராக சங்கானைபிரதேச செயலகத்தின் கலாசார அபிவிருத்திஉதவியாளர் பி.சந்திரவேல் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

“தைப்பொங்கல் பண்டிகை உணர்த்தும் தத்துவம்” என்ற தலைப்பில் காரை எம்.பி. அருளானந்தனின் சிறப்புச் சொற் பொழிவும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளது. (ஓ-17)

# திருமறைக் கலாமன்றத்தினால் நடத்தப்படும் கலை வகுப்புகள்

திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியினால் நடத்தப்படும் 2009 ஆம் ஆண்டு புதிய வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கமைவாக பிரதான பாடங்களாக வாய்ப்பாட்டு, நடனம் (பரதம்/கதகளி), வீணை , வயலின் புல்லாங்குழல்,கிற்றார்,ஓகன் (கீபோட்), சித்திரம், நாடகமும் அரங்கியலும் (க.பொ.த உயர்தர 2011, தரம் 10,11) என்பவற் றிற்கும், சிறப்புப் பாடங்களாக யோகாசனம், அழகியல் கலை(தலை அலங்காரம், முக ஒப்பனை, கேக் ஐசிங், சாறி வேர்க்ஸ்), ஆங்கிலம், கண்டிய நடனம் என்பவற்றிற்கும் விசேட விரிவுரைப் பாடங்களாக, தமிழர் பண்பாடு - அழகியலும் சமயங்களும், தமிழர் பண்பாடு - அழகியலும் மெய்யியலும் என்பற்றிற்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (ஓ)

# ‘கலைமுகம்’ சஞ்சிகைக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தினால் வெளியிடப்பட்டு வருகின்ற “கலைமுகம்” கலை, இலக்கிய, சமூக இதழின் விரைவில் வெளிவரவுள்ள 50 ஆவது சிறப்பிதழுக்கான தரமான ஆக்கங்கள் படைப்பாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

கலை இலக்கியக் கட்டுரைகள் , சிறுகதைகள்,கவிதைகள்,மொழிபெயர்ப்புக்களாகவும் படைப்பாளர்கள் தங்கள் ஆக்கங்களை அனுப்பிவைக்கலாம்.

படைப்புக்களை அனுப்பவிரும்புபவர்கள் தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் “50ஆவது பொன்மலர்”எனக் குறிப்பிட்டு ஆசிரியர், “கலைமுகம்”, திருமறைக் கலா மன்றம், 238, பிரதானவீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு திருமறைக் கலாமன்றம் கேட்டுக் கொள்கின்றது. (ஓ)

# வாரம் ஒரு தகவல்

## மூளை உபயோகம்

“ நான் ஒரு விஷயம் சொல்லுவேன். அது உண்மையா இல்லையா என்பதை நீங்கள் தான் சொல்ல முடியும்”

“சொல்லுங்கள்”

“நமது மூளையை நாம் முழுமையாக உபயோகப்படுத் துவதில்லை என்கிறேன்.”

“ உண்மை தான்... ஒரு சராசரி மனிதன் தனது மூளையில் ஒரு சிறிய பகுதியைத் தான் உபயோகப்படுத்துகிறான். இன்னும் உபயோகிக்க வேண்டிய பகுதி நிறைய இருக்கிறது.”

“ பார்த்தீர்களா... அப்படி இருக்கும் போது அது ஞாபகமில்லை இது ஞாபகமில்லை என்று வேறு சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

“ஒரு மனிதன் தனது மூளையில் 90 ஆயிரம் கோடி வார்த்தைகளை வைத்துக்கொள்ள முடியும்.”

“ அப்படியா...”

“ நாம் படிக்கிறது மனதில் தங்க வேண்டுமானால் நாம் அதைப் படித்த பின்னரும் மனதில் நிறுத்தி ஒரு பத்து நிமிடமாவது அசை போட வேண்டும்”

“ காலை நேரத்தில் படிப்பது நல்லது அல்லவா!”

“ மூளையின் செயலாற்றும் திறன் ஒவ்வொரு மணிக்கும் மாறுபடுகிறது. காலையில் சுறுசுறுப்பு, மதியத்தில் மந்தம், உடம்பு சோர்ந்து போகும்போது மூளையும் சோர்ந்து விடுகிறது. அவ்வப் போது ஓய்வு கொடுத்து அதை உபயோகப்படுத்த வேண்டும்.”

“ இது ஒருமன நோய் மருத்துவமனை தானே?”

“ ஆமாம்”

“ உங்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி டாக்டர். உங்களிடம் இவ்வளவு தூரத்திற்குக் கேள்வி கேட்டதனால் என்னை ஒரு மன நோயாளி என்று நீங்கள் தப்பாகப் புரிந்துகொள்ளக் கூடாது.

“இவ்வளவு தூரத்திற்குப் பதில் சொன்னதால் நீங்களும் என்னை தப்பாகப் புரிந்து கொள்ளக்கூடாது ... நான் டாக்டர் இல்லை!”

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

18.01.2009
(தை 5, ஞாயிற்றுக்கிழமை)
சித்திரை மாலை 5.58 மணிவரை
அட்டமி பின்னிரவு 1.47 மணிவரை
இராகுகாலம் 5.05- 6.35 மணிவரை
சுபநேரம் 9.35-11 .05 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | குடும்ப மகிழ்ச்சி,காரிய அனுகூலம், செல்வாக்கு,அபூர்வ சந்திப்பு. |
| இடபம் | முயற்சி கைகூடும்,ஆரோக்கியம், போசனசுகம், சுவாரஸ்யம். |
| மிதுனம் | வேலைச்சுமை,தனவிரயம், அஜீரண ரோகம், முயற்சி தாமதம். |
| கடகம் | மனச்சஞ்சலம், ஆரோக்கியக் குறைவு, உறவினர்சந்திப்பு, கல்வியில் ஆர்வம். |
| சிங்கம் | கூட்டுமுயற்சி, வாக்குமேன்மை, இனியசம்பவம், போசனசுகம். |
| கன்னி | கௌரவக்குறைவு, திடீர்நன்மை, விவாதம், பணவிரயம். |
| துலாம் | நண்பர்கள் சந்திப்பு,போசனநன்மை, சயனசுகம், கற்பனை மிகுதி. |
| விருச்சிகம் | உணர்ச்சிவசப்படல்,பிரயாணம், தந்தைவழி உறவு, உஷ்ண வியாதி. |
| தனுசு | கீர்த்தி, காரிய நன்மை, விருந்து பசாரம்,செய்தொழில் நன்மை. |
| மகரம் | அதிகாரம்,தொழில் முன்னேற்றம், ஆரோக்கியம்,பெரியோர் உதவி. |
| கும்பம் | கட்டுப்பாடு, புதியமுயற்சி, ஆன்றோர் சந்திப்பு, ஆரோக்கியக் குறைவு. |
| மீனம் | வாகனபயம், போசனசுகம், காரிய தடங்கல்,எதிர்பாராத பிரச்சினை. |

வளவன்

# அடக்கி வையுங்கள்

பெயருக்குத் தானிது;
கையடக்கத் தொலைபேசி!
ஆனா லிதுவோ,
அடங்காத் தொல்லைபேசி!

அவசர வுலகம்
அரை வேக்காட்டறிஞன்
அலுவல்கள் கனத்துப் போச்சு
அதனாலே இதுகளுக் கிப்போ மௌவுசு!

அம்மாவின் காதிலே
மின்னுகிறதோ இல்லையோ
பிள்ளையின் கையிலே
கான்போன் சிணுங்கும்!
அவன் படுத்துறங்கும் போதுமிது;
தலைமாட்டிலே விழித்திருக்கும்!


பொக்கற்றுக்குள்ளிருந்து
பொக்கற்றையே யுறிஞ்சும்
பெருத்த மூட்டைப் பூச்சியிது-இதனைப்
பொருட்படுத்துவார் எவரிங்கே?
அந்தஸ்துப் பொருளாகக் கான்போன்
ஆன பின்னே அந்தரங்கம்கூட
அரங்கம் தானே!

என்ரை மோனட்டையு மொரு
கான்போன் கிடக்கெண்டு
பெருமைப்படும் அப்பனும் ஆத்தாளும்
என்றோ வொருநாள்
கவலைப்பட வேண்டிவரும்!- ஆதலால்
பெற்றோர்க்கு ஓர் பொன்னா புத்திமதி!
கையடக்கத் தொலைபேசியை- உங்கள்
கைகளுக்குள் அடக்கிவையுங்கள்!

-அகியோபி-

# சகல சமூகங்களும் புரிந்துணர்வுடனும் கௌரவத்துடனும் ஒன்றித்து வாழும் இணைந்த இலங்கைக்காக மன்றாடுவோம்

**வன்னியில் இடம்பெறும் யுத்தத்தில் கிளிநொச்சியை இராணுவம் கைப்பற்றிய பின் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவுக்கு வன்னி மக்களின் நிலையையும் அவர்கள் இந்நிலைக்கு ஆளானது எப்படி என்பதையும் உணர்ந்து செயற்படுமாறு வடபகுதி ஆயர்களால் விடுக்கப்பட்ட அவசர வேண்டுகோள் வருமாறு,**



அன்பிற்குரிய ஜனாதிபதி மஹிந்த அவர்கட்கு!

தற்போது நடந்து கொண்டிருக்கும் போரில் பொது மக்களின் பாதுகாப்பும் முன்னுரிமை தரப்படும் என தாங்கள் அண்மையில் அளித்த உறுதி மொழிக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம். இது இனங்களுக்கிடையிலான ஒரு போர் அல்ல என்பதை தாங்கள் உரிய நேரத்தில் வலியுறுத்தியதும் வரவேற்கத் தக்கதாகும்.

யுத்தம் உக்கிரமடைந்து வரும் நெருக்கடியான கால கட்டத்தில் இந்தவார்த்தைகளை மீண்டும் எடுத்துரைத்து செயற்பாட்டின் மூலம் அவற்றை உறுதிப்படுத்துவது அவசியம் என்பதை தாங்கள் உணர்ந்திருக்கிறீர்கள் என்பதில் ஐயமில்லை.

இது தொடர்பாக, வன்னிப் போர் களத்தில் பொது மக்களுக்கு சேதம் ஏற்படுவதைக் தடுப்பதற்கு கவனமாகத் திட்டமிட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என தங்களிடம் மனமார வேண்டுகின்றோம். வன்னிநிலப்பரப் பானது தற்போது குடிசன அடர்த்தி மிகுந்த, அளவில் குறுகிய பிரதேசமாக மாறிக்கொண்டிருக்கிறது. விமானத் தாக்குதல் காரணமாக பொது மக்கள் கொல்லப்பட்ட சில சம்பவங்களைப் பற்றி எம்மில் ஒருவர் (யாழ்ஆயர் ) அண்மையில் தங்களுக்கு கடித மூலம் அறிவித்திருக்கிறார்.

எனவே பொதுமக்கள் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிப்பதனால் அமைதி வலயங்களையும், அமைதி இடைவழிகளையும் அமைப்பது அவசர தேவையாகும். குறைந்த பட்சம் சிறுவயதினர்க்கும் அவர்களுக்குத் துணையாக வரும் முதியோருக்கு இவை பாதுகாப்பளிக்க வேண்டும். இந்த வேண்டுகோள் முன்னரே நாம் மீண்டும் விடுக்கப்பட்டதாகும். இதை நாம் மீண்டும் எடுத்துக் கூறுகிறோம். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும், சுதந்திரமான ஒரு தமிழ் தலைமைத்துவமும் இந்த செயற்பாட்டில் பங்குகொண்டால் நம்பிக்கையைப் பெறத்துணை புரியும்.

போரின் பின் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு தேடல் நடவடிக்கைகள் தவிர்க்க முடியாதவை என்பது விளங்கத்தக்கதே. புலிப்போராளிகள் கண்டு பிடிக்கப்படின் சட்டப்படி அவர்கள் நடத்தப்பட்டு அவர்களுக்குப் புனர் வாழ்வு அளிக்கப்பட வேண்டும்.

ஆயினும் எல்லாப் பொது மக்களையும் ஒட்டு மொத்தமாக பயங்கரவாத சந்தேக நபர்களாக நடத்தாமலிருப்பதில் மிகுந்த கவனம் எடுக்கப்பட வேண்டும்.

வன்னியிலுள்ள பெரும்பாலான குடும்பங்களுக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்புகள் இருக்கவே செய்யும். இத்தகைய நிலைமை ஏற்படுவதற்கு காரணமாயிருந்த சந்தர்ப்ப சூழ் நிலைகள் நாம் அறிவோம். இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் இந் நாட்டின் சமத்துவமான குடிமக்களாக வாழ்வதற்கு இது தடையாக இருத்தலாகாது.

உண்மையில் நாட்டின் சம உரிமையுள்ள இக்குடிமக்கள் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான வாய்ப்புக்கள் , ஜனாதிபதி என்ற முறையில் தங்களது முதன்மையிலும் வழிகாட்டலிலும் பெரும்பாலும் தங்கியிருக்கும். இல்லாவிட்டால் விடுதலைப்புலிகளிட



மிருந்து விடுவிக்கப்பட்ட பின் குடா நாட்டிலும், கிழக்கிலும் நிகழ்ந்த துன்பகரமான சம்பவங்கள் மீண்டும் நிகழலாம். " இனந்தெரியாத " ஆட்கள் கொலை, கடத்தல் செயல்களில் ஈடுபட்டு அச்சத்தையும் கலவரத்தையும் உண்டாக்குவார்கள்.

இந்த மக்கள் சமத்துவமாக நடத்தப்பட வேண்டுமானால் அதற்கு முக்கிய தேவை ஒன்று உண்டு. மக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வொன்றை தாமதமின்றி கொண்டு வருவதே அத் தேவை "இராணுவத் தீர்வின் வெற்றி அரசியல் தீர்வின் அவசியத்தை மறைத்து விடும் " என்ற பேரச்சம் மக்கள் மத்தியில் பரவலாக காணப்படுகின்றது. இந்த அச்சத்தை நீங்கள் போக்க வேண்டும். இதன் பயனாக இராணுவ நடவடிக்கையிலிருந்து சிவில் நிர்வாகத்துக்கு , அதன் பின் பங்கேற்கும் ஆட்சிக்கும் ஜனநாயகத்துக்கும், சட்ட ஒழுங்கிற்கும் இட்டுச்செல்லும் இடை மாற்றம் பயனுள்ளதாகவும் இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் குடா நாட்டிலும் கிழக்கிலும் காணப்படுகின்ற இராணுவ -சிவில் இரட்டை நிர்வாகம் போன்ற நிலைமைகள் தொடர்ந்தும் இருக்கும்.

இப்போது இருக்கும் நிலைமைகள் இப்பிரதேசங்களிலுள்ள மக்கள் சுதந்திரமாக நடமாடுவதையும், தமது அபிப்பிராயங்களை வெளியிடுவதையும் தடை செய்து ஜனநாயக சுதந்திரத்தைப் பறித்து விடுகின்றன என்பது நன்கு அறியப்பட்ட ஒன்றாகும். தாங்கள் பன்முறை கூறியது போல் அப் போரின் நோக்கம் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல, தமிழ் மக்களை விடுவிப்பதேயாகும் என்பதால் குடா நாட்டிலும் ,கிழக்கிலும் ,வன்னியிலும் உள்ள தமிழர்கள் இந்த தடைக்கட்டுக்கள் , சந்தேகங்கள், வன்முறைகள் ஆகிய பயங்கர இன்னல்களிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

இவ்விடயம் தங்கள் உடனடியான கவனத்தைப் பெறும் என்று நம்பி தங்கள் நலமளிக்கும் முடிவுக்காக காத்திருக்கின்றோம் . அதே வேளையில் கடந்த காலத்தின் பயற்கலமான தவறுகள் சீரமைக்கப்பட்டு சகல சமூகங்களும் புரிந்துணர்வுடனும் கௌரவத்துடனும் ஒன்றித்து வாழும் வன்முறைகளற்ற நீதியான, சமரசமான ,இணைந்த இலங்கைக்காக மன்றாடுவோம், உழைப்போம் என உறுதி கூறுகின்றோம்.

அமைதியும் ஆசீரும் உண்டாகுக.

தகவல்
யாழ். ஆயரின் செயலர்.




## யாழ். போதனாவைத்தியசாலை பணிப்பாளரின் பதில்

*11.01.2009 அன்று வலம்புரியில் வெளியான யாழ். போதனா வைத்திய சாலையின் புதிய பணிப்பாளரின் முன் பாரிய பொறுப்பு என்ற ஆசிரியர் தலையங்கத்திற்கு யாழ். போதனாவைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.தேவநேசன் எழுதிய பதில் வாசகர்களின் நலன் கருதி இங்கு பிரசுரிக்கப்படுகிறது.*

ஆசிரியர்,
வலம்புரி,
யாழ்ப்பாணம்.

### யாழ். போதனா வைத்தியசாலையின் புதிய பணிப்பாளரின் முன் பாரிய பொறுப்பு

மேற்குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாக 2009.01.11 ஆம் திகதி தங்கள் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தின் கீழ் உள்ளடக்கப்பட்ட விடயமாக எமது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள சடலங்களை மீளப் பெற்றுக்கொள்ளும் போது இங்கு கடமையிலுள்ள தொழிலாளர்கள் பணம் அறவீடுசெய்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்விடயம் சம்பந்தமாக பாதிக்கப்பட்ட பொதுமக்களோ அல்லது சம்பந்தப்பட்ட வேறு யாரேனும் எமக்கு நேரடியாக முறைப்பாடு செய்வதில்லை. இதனால் நாம் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கின்றது. எனவே எதிர்வரும் காலங்களில் இது சம்பந்தமான சம்பவங்கள் நடைபெறும் போது நேரடியாக சாட்சியங்கள் மூலம் எமது வைத்தியசாலை பணிப்பாளருக்கோ அன்றி நிர்வாக உத்தியோகத்தர் II இற்கோ முறைப்பாடு செய்யப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன்.

மேலும் இம்முறைப்பாடு சம்பந்தமாக இதனோடு சம்பந்தப்பட்ட ஊழியர்களிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது என அறியத்தருகின்றேன்.

பணிப்பாளர்

ஆசிரியர் குறிப்பு:

யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.தேவநேசன் வழங்கிய • பதில் வாசகர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி இருக்கும் என்பதில் எமக்கு முழுமையான நம்பிக்கை உண்டு.

அவரின் நடவடிக்கைகளுக்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதே எமது அவா. (ஆ-ர்)

## கந்தபுராண படிப்பு பூர்த்தி விழா

(மருதங்கேணி)

தென் புலோலி புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தின் கந்தபுராண படிப்பு பூர்த்திவிழா 21 ஆம் திகதி புதன் கிழமை நடை பெறவுள்ளது.

அன்றுதெய்வானை அம்மன் திருக் கல்யாண படிப்பு நடைபெறும். இவை ஆலய பிரத குரு சோ.ஜெயபாலசுந்தர குருக்கள் தலைமையில் நடைபெறும்.

22 ஆம் திகதி கந்தபுராண பூசையும் 23 ஆம் திகதி வைரவர் மடையுடனும் கந்தபுராண பூர்த்தி விழா முடிவு பெறும். (ஓ-35)












ஸ்ரீ அம்மா பகவான் நன்றி நவில்வோம் நற்பெரும் நாள் நிகழ்வு நேற்று யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஸ்ரீ அம்மாபகவானின் திருவுருவப்படம் யாழ். இந்துக் கல்லூரி வழிபாட்டுத் தலத்தில் இருந்து மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதையும், நாதஸ் வரக் கச்சேரி இடம்பெறுவதையும்,கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மாணவிகளின் நாட்டிய நடனத்தையும் படங்களில் காணலாம்.







# வில்லு

நடிப்பு: விஜய்,நயன்தாரா,பிரகாஷ்ராஜ்,வடிவேலு, ரஞ்சிதா
இசை: தேவிஸ்ரீபிரசாத்
இயக்கம்:பிரபுதேவா
தயாரிப்பு: கருணாமூர்த்தி, சி.அருண்பாண்டியன்

இந்தியில் வெளியான "சோல்ஜர்" படத்தை மாற்றம் செய்து விஜய்க்குப் பொருத்தமான சட்டையாகத் தைத்திருக்கிறார்கள். அப்பாவின் பெயரைக் களங்கப்படுத்திய வில்லன்களை மகன் பழிவாங்கும் அதே பழைய போர்முலா கதைதான். ஆனால் ஆடல், பாடல், கொண்டாட்டம் என அதற்கு வானவில்லின் அத்தனை நிறங்களையும் சேர்க்க முயற்சி செய்திருக்கிறார் இயக்குநர் பிரபுதேவா.

மேஜர் சரவணன் (விஜய்-1) நேர்மையின் மறுவடிவம்.அந்த நேர்மையால் பாதிக்கப்பட்ட 4 இராணுவ அதிகாரிகள் சரவணனை சுட்டுக்கொன்று விடுகிறாக்கள். தேசத் துரோகிப் பட்டத்தையும் சுமத்திவிடுகிறாக்கள். இதனால் இறப்பில் கிடைக்க வேண்டிய இராணுவ மரியாதை கூட சரவணனுக்கு கிடைக்காமல் போகிறது. சரவணனின் குடும்பத்தையே ஊரிலிருந்து ஒதுக்கி வைத்துவிடுகிறாக்கள்.இருபது வருடங்களுக்குப் பிறகு சரவணனின் மகன் புகழ் (விஜய்-2) தந்தை பட்ட அவமானங்களுக்கு பழிவாங்கப் புறப்படுகிறார்.

தந்தையைக் கொன்ற நான்கு வில்லன்களிடமும் நான்கு விதமான நாடகங்களை அரங்கேற்றி, கூட இருந்தே அவர்கள் கதையை முடிக்கிறார்... என்று நீள்கிறது கதை.

அப்பா -மகன் என இரட்டை வேடம் விஜய்க்கு.பெரிய ரிஸ்க் எடுத்து நடிக்கும் அளவுக்கு காட்சிகள் இல்லாததால் ஜஸ்ட் லைக் தட் ஊதித் தள்ளிவிடுகிறார். ஆனால பார்ப்பவர்கள் தான், இன்னும் எவ்வளவு காலத்துக்கு ஒரே மாதிரி நடிப்பாரோ... என்று சலித்துக் கொள்கிறார்கள்.



திரைவிமர்சனம்



மகன் விஜய் நினைத்தால் ஆகாயத்தில் பறக்கிறார், நயனுடன் ஆடுகிறார், சண்டைக் சண்டைக் காட்சிகளில் பொறி பறக்க வைக்கிறார்.நயன்தாராவுக்கு வழக்கம்போல 'ஆடைத் தள்ளுபடி' வேலை தான் இந்தப் படத்திலும்.அதைச் சரியாகச் செய் திருக்கிறார். அவருக்கும் விஜய்க்கும் நடக்கும் செல்லச் சண்டைகள், சிணுங் கல்கள் பொங்கல் கரும்பு. வடிவேலு சீக்கிரமே ரூட்டை மாற்றியாக வேண்டிய கட்டாயம் வந்திருக்கிறது. அரைத்த மாவைத் திரும்பத் திரும்ப அரைத்துக் கொண்டி ருக்கிறார்.

படத்தின் பெரிய பலம் தேவி ஸ்ரீபிரசாத் இசை. படத்துக்குப் பலம் அந்த தெலுங்கு ரீமேக் ஜல்சா...,மம்மி டாடி, நீ கோபப்பட்டுப் பார்த்தால்... பாடல்கள் திரும்பத் திரும்பக் கேட்க வைக்கும் ரகம்.ஒளிப்பதிவும், பாடல் அமைப்பும் சபாஷ் சொல்ல வைக்கின்றன.

பணத்தைத் தண்ணீராகச் செலவழித்திருக்கும் ஐங்கரன் நிறுவனத்தின் தாராளம், காட்சிகளில் தெரிகிறது.அதேபோல, திரைக்கதையிலும் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்தியிருந்தால் செய்த செலவுக்கு இன்னும் நியாயம் கிடைத்திருக்கும்-சிறப்பாகவும் இருந்திருக்கும்.

# தங்கை வேடத்தை வெறுக்கும் நடிகை



யாரடி நீ மோகினி படத்தில் நயன்தாராவுக்கு தங்கையாக நடித்து, தனுஷுடன் பாலக்காட்டு பக்கத்துலே... என்ற ரீமேக் பாட்டுக்கு ஆட்டம் போட்டு தமிழ் ரசிகர்களிடையே அறிமுகமானவர் நடிகை சரன்யா மோகன். இந்தப் படத்தை தொடர்ந்து இவர் நடித்த ஜெயம் கொண்டான் படத்திலும் படத்தின் நாயகிக்கு தங்கை கேரக்டர் தான் கிடைத்தது. அழகும், அனுபவமும் இருக்கும் தனக்கு கதாநாயகி வாய்ப்பு வரவில்லையே என நினைத்து தவித்துக் கொண்டிருக்கும் சரன்யா, தற்போது ஒரு அதிரடி முடிவை எடுத்திருக்கிறாராம். அதாவது இனிமேல் தங்கை வேடத்தில் நடிப்பதில்லை என்ற முடிவு தான் அந்த அதிரடி முடிவாம்.

# தமன்னாவின் அடுத்த இலக்கு



கேடி படத்தின் மூலம் சினிமாவில் அடியெடுத்து வைத்த தமன்னா, கல்லூரி படத்தில் தகதகக்கும் தங்க மங்கையாக வந்து ரசிகர்களை கவர்ந்து இழுத்தார்.

அடுத்தடுத்து பட வாய்ப்புக்களை குவித்து வரும் தமன்னா தற்போது சூர்யாவுடன் அயன், பருத்திவீரன் கார்த்தியுடன் பையா, சித்தார்த்துடன் ஆனந்த தாண்டவம் எனப் படங்களில் நடித்து வருகிறார்.

தமன்னாவின் அடுத்த இலக்கு நடிகர் விஜய் தானாம். எப்படியும் இந்த 2009 ஆம் ஆண்டின் இறுதிக்குள் விஜய்யுடன் ஒரு படத்திலாவது ஜோடி போட வேண்டும் என சபதம் ஏற்றிருக்கிறாராம்!

# சினி துளிகள்



♦"வாரணமாயிரம்" படத்திற்காக இலைதழைகளைசாப்பிட்டு, ஒல்லிக்குச்சியாக உடலை இளைக்க வைத்த சூர்யா, அடுத்து கே.எஸ்.ரவிக்குமார் இயக்கும், 'ஆதவன்' படத்தில், பல அவதாரம் எடுக்கிறார். அதில் ஒன்று வில்லன் கேரக்டர் என்பதால், இத்தனை காலமும் வாயைக் கட்டி, வயித்தைக் கட்டி இளைக்க வைத்த உடம்பை, தற்போது விதவிதமான உணவுகளை உண்டு, மாமிச மலையாக்குகிறார்.



♦ நடிகை தமன்னாவுக்கு தமிழ் பேச வேண்டும் என்ற ஆசை மட்டுமே இருக்கிறதே தவிர அதற்கான முயற்சியில் இன்னும் தீவிரமாக இறங்க வில்லை. சூட்டிங் ஸ்பாட்டில் அவர் பேசி நடிக்க வேண்டிய காட்சிகளைத் தெள்ளத் தெளிவாக இந்தியில் எழுதிக் கொடுக்கச் சொல்கிறார்.அதன்பின்னர் அந்தத் தாளில் எழுதிக் கொடுத்தபடி நடித்து வருகிறார்.

♦"ஆயிரத்தில் ஒருவன்' படத்தில் வில்லனாக நடித்து வரும் பார்த்தீபன், முதலில் தொடர்ந்து வந்த வில்லன் வாய்ப்புகளை நாசுக்காக தவிர்த்தார். மீண்டும் ஹீரோவாக நடிக்க முயற்சி செய்தார். ஆனால், மார்க்கெட் இல்லாத பார்த்தீபனை நம்பி, முதலீடு செய்ய எவரும் முன்வரவில்லை. சொந்தப் படம் எடுக்கலாமா அல்லது முழுநேரம் வில்லன் அவதாரம் எடுக்கலாமா என்று ஆழ்ந்த யோசனையில் இருக்கிறார் புதுமை விரும்பி.



♦ குடை மிளகாய் போன்ற மூக்கை உடைய நடிகை சந்தியா ஏற்கனவே ஒரு முறை வெளிநாட்டுக்கு சென்று மூக்கில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார். அதனைத் தொடர்ந்து தற்போது மூக்கிற்கு தினமும் மசாஜ் செய்து கொள்கிறார்.



♦ நம்பர் வன் காமெடி நடிகரான வடிவேலு, தன் மீது கால்ஷீட் சொதப்பல் நடிகர் என்ற களங்கம் விழுந்துவிடக்கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருக்கிறார். இதனால் இரவு,பகல் இடைவிடாத படப்பிடிப்பில் இருந்தாலும், சொன்னபடி ஸ்பாட்டுக்கு வந்துவிடுகிறார். ஒருவேளை போக்குவரத்தில் தாமதம் ஏற்பட்டு விட்டாலும், அதிகப்ப டியான நேரம் நடித்துக்கொடுத்து,தன்னால் படாதிபதிகளுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுகட்டுகிறார்.

♦ முதலில் அர்ஜுனுடன் உதவி இயக்குநராகப் பணியாற்றி ,ஹீரோவாகி விட்ட விஷால், ரைடக்டர்களை விட, உதவி இயக்குநர்களிடமே அதிக நெருக்கமாக இருக் கிறார்.மேலும், தான் எதிர்காலத்தில் இயக்கி நடிக்க இருக்கும் கதைகளையும் அவர்களிடம் சொல்லிக் கருத்துக் கேட்கிறார். அவரது யோசனைகளையும் ஏற்றுக் கொள் கிறார்.இதனால், எப்போதும் அவரைச் சுற்றி உதவி இயக்குநர்கள் கூட்டம் கொட்டம் அடிக்கிறது.

# ஷில்பாவிடம் கேட்டால் தப்பா...!



பத்து படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் தலைகாட்டியவர் நடிகை சோனா. அந்தப் படம் பெரிய அளவில் பெயர் சேர்க்காத வருத்தத்தில் இருந்த சோனாவுக்கு குசேலன் மூலம் அடித்தது லக். குசேலன் படத்தில் வடிவேலுவுக்கு ஜோடியாக நடித்த சோனாவின் பெயரை தமிழ் ரசிர்களின் உதடுகள் உச்சரிக்கத் தொடங்கின. சினிமாவில் மட்டுமல்ல ஏதாவதொரு தொழில் தொடங்கி அதிலும் சாதிக்க வேண்டும் என்ற கொள்கையை உடைய சோனா பேஷன் ஷோ ரூம் ஒன்றைச் சென்னையில் திறந்திருக்கிறார்.

இந்தப் பேஷன் ஷோரூமை திறந்து வைப்பதற்காக சென்னை வந்திருந்தார் இந்தி நடிகை ஷில்பாஷெட்டி. இந்த விழாவில் வளரும் நடிகை சோனாவின் முயற்சியைப் பாராட்டிப் பேசிய ஷில்பாவிடம் இரண்டே இரண்டு கேள்விகளை மட்டுமே கேட்க மீடியாக்களுக்கு அனுமதி தரப்பட்டது.

அப்போது ஒரு பெண் நிருபர், தமிழில் மிஸ்டர் ரோமியோ, குஷி ஆகிய இரண்டு படங்களில் நடித்த நீங்கள் அதன் பின் தமிழில் நடிக்காதது ஏன்? என்று கேட்டார்.அதற்குப் பதிலளித்த ஷில்பா,மாஸ்டர் பிரபுதேவா என்னுடைய பிரண்ட் அவ்வளவுதான் என்று கூறி முடித்துக் கொண்டவரிடம்,அடுத்த கேள்விகேட்க ஆளில்லை! அதன்பின்னர் போட்டோகிராபர்களுக்கு போஸ்கொடுத்துவிட்டு புறப்பட்டார் ஷில்பா.



# தமிழுக்கு வரமறுக்கும் அசின்



தமிழ் சினிமாக்களில் நடித்ததன் மூலம் பிரபலம் ஆன நடிகை அசின், பொலிவூட்டில் புகழ் கிடைத்ததும் தமிழுக்கு வர மறுக்கிறார். எப்படியாவது நடித்துக்கொடுங்கள் என்று அசினிடம் கெஞ்சினால்... 2 கோடி ரூபாய் சம்பளம் கொடுத் தால் கால்ஷீட் தருகிறேன்.

அதுவும் ஒரு வருடத்துக்குப் பிறகுதான்! என்று தடாலடியாக பதில் சொல்கிறாராம். இந்தியில் வெளியான கஜினி ஹிட் ஆனதைத் தொடர்ந்து தற்போது லண்டன் ட்ரீம்ஸ் படத்தில் நடித்து வரும் அசின், ஷாருக்குடன் ஜோடி போட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எமக்காக உணவைத் துறந்து போராடும் போது எமது இதயத்தில் இமயத்துக்கு நிகராகின்றீர்கள்

## திருமாவளவனுக்கு அமெரிக்க இலங்கை தமிழ்ச் சங்கம் கடிதம்

(சென்னை)

தமிழீழ மக்களின் மீது இலங்கை அரசு தொடுத்துவரும் போரை நிறுத்துமாறு இந்திய அரசாங்கத்தை கோரி உண்ணா நிலைப் போராட்டம் தொடங்கியுள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவனுக்கு அமெரிக்க இலங்கை தமிழ்ச் சங்கம் வாழ்த்து தெரிவித்துள்ளது.

அமெரிக்க இலங்கை தமிழ்ச் சங்கத்தின் தலைவரினால் கையெழுத்திடப்பட்டு தொல். திருமாவளவனுக்கு கடந்த வியாழக்கிழமை அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழீழத் தமிழர்களுக்குத் துணிவையும் எதிர்காலம் பற்றிய அசையாத நம்பிக்கையையும் தரும் ஒருதலைவனாக நீங்கள் என்றும் இருக்கின்றீர்கள்.

தமிழீழத் தமிழர்களின் அரசியல் விடுதலை பற்றிய கொள்கையில் வளைவுகளற்ற ஒரே நேர்கோட்டில் நீங்கள் நடந்து கொண்டேயிருக்கின்றீர்கள். தமிழீழம் என வரும் போது கட்சிக்கும் அரசியலுக்கும் அப்பால் இனத்தின் சுய மரியாதையை முன்னிறுத்திய ஒரு எடுத்துக்காட்டாக நீங்கள் திகழ்கின்றீர்கள்.

எமக்காக உணவைத் துறக்கும் போராட்டத்தை தொடங்கும் போது எங்கள் இதயங்களிலே இமயத்திற்கு நிகரானவராய் நீங்கள் அமர்கின்றீர்கள்.

உங்கள் உணர்வுக்கும் உறுதிக்கும் முன்னால் தமிழீழத் தமிழர்களின் சார்பில் அமெரிக்க இலங்கை தமிழ்ச் சங்கத்தினராகிய நாங்கள் தலை தாழ்த்தி வணங்குகின்றோம்.

தமிழீழ மக்களுக்கு எதிராக இன்று முன்னெடுக்கப்படும் பெரும் போரில் இந்தியா ஆற்றுகின்ற பங்கு மிகப் பெரியது. இந்தியா நினைத்தால் போரை நிறுத்துவது மட்டுமல்லாது தமிழர்கள் தமது உரிமைகளை வென்றெடுக்கவும் வழி செய்ய முடியும்.

இதை நீங்கள் தெளிவாக உணர்ந்துள்ளீர்கள் என்பதன் வெளிப்பாடு தான் உங்கள் உயிரையே பணயம் வைத்து நீங்கள் தொடங்கியுள்ள போராட்டம்.

இந்தப் போராட்டத்தில் வெற்றி பெற்று தமிழர்களின் உரிமைகளைப் பெற்றெடுத்து கம்பீர நடைபோட்டு நீங்கள் எழுந்து வர வேண்டும்.

தூரத்தில் இருந்தாலும் உணர்வுகளால் நாம் உங்கள் அருகிலேயே அமர்ந்துள்ளோம். வாழ்த்துக்கள் ! எனஅதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

## திருமாவளவனுக்கு ஆதரவு தெரிவித்து லண்டனில் விஷேட பூசை

(சென்னை)

தாயகத்தில் போரை உடன் நிறுத்துமாறு வலியுறுத்தி விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் ஆரம்பித்துள்ள சாகும் வரை உண்ணா நிலைப் போராட்டத்தை ஆதரித்தும் அவரது கோரிக்கை வெற்றியடையவும் அவரது உடல் நலம் வேண்டியும் லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தில் நேற்று சனிக்கிழமை பகல் விசேட பூசையும் இன்று ஞாயிற்றுக் கிழமை முழு நாள் அடையாள உண்ணா நோன்பும் நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (ஓ-6)

## ஈழத் தமிழர்களை காப்பாற்றுவதன்றி வேறெந்த உள்நோக்கமும் இல்லை

### உண்ணாவிரதம் மேற்கொள்ளும் திருமாவளவன் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் அழிவின் விளிம்பில் உள்ள 5 இலட்சம் தமிழர்களை காப்பாற்றவே உண்ணாவிரதம் இருக்கிறோமே தவிர வேறெந்த உள் நோக்கமும் இல்லை என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் இனப்படுகொலையை நிறுத்தி அமைதிப் பேச்சை நடத்துமாறு இந்திய அரசை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்து வருகிறோம்.

இந்தப் போராட்டம் எந்த வகையிலும் தமிழக அரசுக்கு நெருக்கடி கொடுக்க வேண்டும் என்பதற்காக அல்ல.


இந்திய அரசின் தமிழின விரோதப் போக்கை அம்பலப்படுத்த பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்திருக்கிறோம் தமிழக கட்சிகளும் தமிழக அரசின் சார்பில் முதல்வர் கருணாநிதியும் பல வழிகளில் இந்திய அரசை போரை நிறுத்தச் சொல்லி வலியுறுத்தியிருக்கிறார்.

ஆனால் இந்திய அரசு சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை தமிழக மக்களின் உணர்வுகளையும் மதிக்கவில்லை . சட்டப் பேரவை தீர்மானம் மனிதச் சங்கிலிப் போராட்டம் அனைத்துக் கட்சி சார்பில் பிரதமரிடம் வலியுறுத்தல் உள்ளிட்டவற்றுக்குப் பிறகும் மத்திய அரசு கிஞ்சித்தும் அசைந்து கொடுக்கவில்லை.

வெளியுறவுச் செயலரின் இலங்கைப் பயணம் மத்திய வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனன் கொழும்புக்குச் சென்றிருப்பது எதற்காக என்பது அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. அவருடைய பயணம் போர் நிறுத்தத்துக்கு வழி வகுக்கும் என்று நம்ப முடியவில்லை.

அழிவின் விளிம்பில் முல்லைத்தீவில் ஒரு இலட்சம் மக்கள் மட்டுமே வாழக்கூடிய பகுதியில் 5 இலட்சம் தமிழர்கள் வெறும் 40 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் அடைபட்டு தவிக்கின்றனர்.

இலங்கை இராணுவம் அவர்களைச் சுற்றி வளைத்து தாக்கி வருகிறது. விமானம் மூலம்



குண்டு வீசி வருகின்றனர். கொத்து கொத்தாய் மக்கள் செத்து மடிந்து வரும் இந்தச் சூழலில் தமிழகத்தில் எந்தக் கொந்தளிப்பும் இல்லாமல் அமைதிச்சூழல் இருப்பது எங்களுக்கு மிகுந்த மனவேதனையை அளிக்கிறது.

அத்தகைய அமைதிச் சூழலை உடைத்து தமிழக மக்களின் குமுறலை வெளிப்படுத்த வேண்டும் ஈழத் தமிழர்களை காப்பாற்ற வேண்டும் என்ற வகையில் மட்டும் தான் போராட்டத்தை முன்னெடுத்திருக்கி றோமே தவிர வேறெந்த உள்நோக்கமும் இல்லை என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-6)

## இலங்கை அரசு தமிழர் படுகொலையை நிறுத்தப் போகிறதா?-இல்லையா?

### பொறுத்திருந்து பார்ப்போம் என்கிறார் கருணாநிதி

(சென்னை)

இந்தியப் பேரரசு என்னமுடிவெடுக்கிறது என்பதையும் இலங்கை அரசு அப்பாவித் தமிழர்களைப் படுகொலைக்கு ஆளாக்கு



வதை நிறுத்தப் போகிறதா இல்லையா என்பதையும் அறிந்திட சில நாட்கள் பொறுத்திருப்பது தான் நலம் என்று முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.


இலங்கையில் போரை நிறுத்தி, தமிழர்களை காப்பாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி, சென்னையை அடுத்த மறைமலை நகரில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் . திருமாவளவன் கால வரையறையற்ற உண்ணாவிரத போராட்டம் தொடங்கினார்.

இது குறித்து முதல் அமைச்சர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

திருமாவளவன் தன்னிச்சையாக யாரிடமும் அறிவிக்காமல் தானே ஒரு முடி வெடுத்து இந்த பிரச்சினையை வலியுறுத்தி ஒரு உண்ணா நோன்பை துவங்கியுள்ளார். எத்தனையோ பேரணிகள், கண்டன ஊர்வலங்கள், பல்லாயிரவர் திரண்ட மாநாடுகள், உண்ணா நோன்புகள் போன்ற இத்தனையினாலும் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நமது உணர்வை வெளிப்படுத்தியிருக்கிறோம்.

இலங்கைப்பிரச்சினையில் ஐம்பதாண்டு காலமாக என்னால் முடிந்ததையெல்லாம் செய்து விட்டேன். இன்னும் செய்வதற்கும் தயாராக இருக்கிறேன். என்ன செய்ய வேண்டும் என்பதை உங்கள் ஆலோசனைக்கே விட்டு விடுகிறேன்.

இதனிடையே மத்தியஅரசின் வெளி உறவுத் துறை செயலாளர் சிவ்சங்கர்மேனன், இன்றைக்கு இலங்கை சென்றுள்ளதும் முக்கிய மானதாகவே கருத வேண்டியுள்ளது. எனவே, இந்தியப் பேரரசு என்ன முடிவெடுக்கிறது என்பதையும் இலங்கை அரசு அப்பாவித் தமிழர்களைப் படுகொலைக்கு ஆளாக்கு வதை நிறுத்தப் போகிறதா இல்லையா என்பதையும் அறிந்திட சில நாட்கள் பொறுத்திருப்பது தான் நலம் என்றும் நலமான முடிவுக்கு இந்தியப் பேரரசை நாம் நம்பியிருக்கலாம் என்றும் கருதுகிறேன் என்றார்.(ஓ-6)




## இலங்கையில் போரை தடுப்பதற்கு இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்

### திராவிடர் கழகத் தலைவர் வீரமணி கோரிக்கை

(சென்னை)

இலங்கையில் போரை தடுத்து நிறுத்த மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தெரிவித்தார்.


இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் , இலங்கையில் போரை நிறுத்தவும் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்படும் இழப்பை தடுக்கவும் மத்தய அரசு இனியாவது தனது மௌனத்தைக் கலைக்க வேண்டும்.

தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு வரும் நிலையில் இலங்கைக்கு கிரிக்கெட் அணியை அனுப்புவது நீரோ மன்னனின் செயல்போன்றது.பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் அணியை அனுப்பமாட்டோம் என்று அறிவித்த மத்திய அரசு இலங்கைக்கு மட்டும் கிரிக்கெட் அணியை அனுப்பலாமா?

காங்கிரஸ் கட்சியின் எதிர்காலத்தை கருதியாவது தமிழர் விரோத நடவடிக்கைகளை அதன் தலைவர் சோனியாகாந்தி தடுத்து நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (ஓ-6)

## பழநிக்கு அருகில் பழமையான கற்கால ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன

பழநிக்கு அருகிலுள்ள பாப்பம்பட்டி - நரிப்பாறை குகையொன்றில் சுமார் ஐயாயிரம் ஆண்டுகள் பழமையான கற்கால மனிதர்களின் ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



இது பற்றி தமிழக தொல்லியல் ஆய்வாளர்கள்கூறுகையில் , பழநிக்கு மேற்கே 20 கிலோ மீற்றர் தூரத்தில் குதிரை யாற்றின் கரை யோரம் ஆயிரம் அடி உயரமுள்ள நீண்ட மலைத் தொடர் உள்ளது. இதில் நரிப்பாறை என்ற மலை உச்சியில் இயற்கையாக அமைந்த இரண்டு குகைகள் உள்ளன. இந்த குகைகளில் தான் கற்கால மனிதர்களின் ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஒரு குகையில் கற்கால மனிதர்கள் வேட்டையாட கிளம்பிச் செல்லும் நிகழ்வு ஓவியமாக வரையப்பட்டுள்ளது. தற்போது உள்ள ஓவியத்தில் ஒரு மனிதன் வேட்டை குழுவை நடத்தி செல்வது போல் சித்திரிக்கப்பட்டுள்ளது. அவனுக்கு பின்புறம் ஒரு மனிதன் ஒரு விலங்கின் மீது அமர்ந்து செல்வது போல் வரையப்பட்டுள்ளது. அமர்ந்து செல்லும் மனிதன் இந்த குழுவின் தலைவனாக இருக்கலாம். நடந்து வருபவனின் ஒரு கையில் கல் கோடாரி உயர்த்தி பிடித்து வருவது போல் வரையப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஓவியத் தொடருக்கு கீழே உள்ள ஓவியத்தில் ஒரு மனிதன் படகு ஒன்றில் அமர்ந்து அதை துடுப்பு போட்டு இயக்குவது போல் வரையப்பட்டுள்ளது. விலங்கின் மேல் அமர்ந்து செல்லும் மனிதனின் படம் குதிரையை குறிப்பதாகவும் படகு செல்லும் ஆறு இந்த மலைஅடிவாரத்தில் ஓடும் குதிரை யாற்றை குறிப்பதாகவும் கொள்ளலாம். குதிரையாறு தமிழ்ச் சங்க இலக்கியங்களில் குதிரையாறு என்றும் மலை குதிரை மலை என்றும் அழைக்கப்படுகிறது. குகையில் உள்ள மொத்த ஓவியங்களும் சாம்பல் நிறத்தில் உள்ளன. மனிதர்களும் விலங்குகளும் மெலியதாக வரையப்பட்டுள்ளன. அடுத்த குகையில் இரத்தச்சிவப்பு நிறத்தில் ஏழு கோடுகள் வரையப்பட்டுள்ளன. இந்த கோடுகள் சராசரியாக 13 சென்றிமீற்றர் நீளமும் 7 செ.மீ. உயரமும் உள்ளவையாக உள்ளன. இந்த கோடுகள் தமிழர்களின் பண்டைய தெய்வங்களான ஏழு கன்னிமார்களை குறிப்பதாக உள்ளது.

சிந்து சமவெளி நாகரிகத்திலேயே 7 கன்னிமார் உருவங்கள் கிடைத்துள்ளன. இது வரை தமிழகத்தில் கிடைத்துள்ள 7 கன்னிமார் உருவங்களில் கற்காலத்தை சேர்ந்த இந்த அடையாளமே மிகப்பழமையானதாகும். இரண்டு குகைகளிலும் கற்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகள் ஏராளமான அளவில் கிடக்கின்றன. ஆகவே இந்த குகை பழங்கற்கால தமிழ் மக்களின் வாழ்விடமாக இருந்துள்ளது என்பது தெரியவந்துள்ளது. பானை ஓடுகளும் ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்றன. பெருங்கற்காலத்தை சேர்ந்தவை இந்த பானை ஓடுகள். ஆகவேபழையகற்காலம்முதல்பெருங்கற் காலம் வரை அதாவது ஐயாயிரம் ஆண்டுகள் பழமையானது என்று தெரிவித்துள்ளனர். (ஓ-6)

# இலங்கையில் தமிழர் 43

## ஆதி இரும்புக் காலம்

ஆதி இரும்புக்காலப் பண்பாடும் தூர வர்த்தகமும் ஒரு புதிய காலகட்டத்தைத் தென்னிந்தியா – இலங்கைப் பிராந்தியத்தில் தொடக்கி வைத்து வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை முற்றுவித்தன.

இக்கால கட்டத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்களை அறிவதற்குத் தொல்லி யலே மிக முக்கியமான, மிக நம்பகமான சான்றுகளைத் தருகின்றது. எனினும் மேலே குறிப்பிடப்பட்ட கதைகள் அப்பொழுது நடைபெற்ற பெருமாற்றங்களைப் பற்றிச் சில தகவல்களைத் தந்துதவுகின்றன.

பின்னர் முக்கிய குறுநில அரசுகளின் அதிகார மையங்களாக வளர்ந்த மதிரை மற்றும் தம்பபண்ணி ஆகிய மையங்களின் எழுச்சியைப் புரிந்து கொள்ள இக் கதைகள் உதவுகின்றன. தம்பபண்ணி பற்றி கதைகள் பௌத்த பாளி வரலாற்றேடுகளில் பேணப்பட்ட காரணத்தினால் இன்று அவற்றை அறிந்து கொள்ள முடிகின்றது.

ஆனால் மதிரை பற்றிய கதைகள் அவ்வாறு பேணப்படவில்லை. மதிரை பற்றிய சில தகவல்கள் கூட இலங்கையின் பாளி வரலாற்றேடுகளில் கிடைப்பதால் தமிழ் நாட்டின் வரலாற்றுக்கும் இவை பயனுடையவை எனலாம்.

இடைக் கற்கால மக்கள் வணிகர்களுடன் தொடர்புகொண்ட முக்கிய இடங்களுள் இரண்டு மதிரையும் தம்பபண்ணியுமாம்.

இடைக் கற்காலம் முடியும் கட்டத்தில் இவை இரண்டும் முக்கிய பண்டமாற்று மையங்களாக எழுச்சி பெற்றிருக்கக் கூடும். இதனால், ஆதி இரும்புக் காலப் பண்பாடு பரவத் தொடங்கிய போது, இவ்விரண்டு மையங்களும் புதிய பண்பாட்டின் செல்வாக்கினை முதலில் பெறக் கூடிய நிலையில் இருந்தன எனலாம். புதிய பண்பாட்டின் செல்வாக்குக் கிட்டியதும் இவ்விரு மையங்களிலும், அதிகாரம் செலுத்தியோர் கூடுதலான முக்கியத்துவத்தையும் அதிகாரத்தையும் பெற வாய்ப்பு ஏற்பட்டது.

தூர வர்த்தகத்தின் விளைவாகவே இரு இடங்களிலும் பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. தூரத்து வணிகர் வந்தபோது முதலில் ஓரளவு எதிர்ப்புத் தோன்றியிருக்கலாம். பின்னொரு கட்டத்தில் தூரத்து வணிகர்களுடைய தலைவர்கள் அல்லது அவர்களுடன் வந்தவேறு தலைவர்கள் சுதேசத் தலைவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களை மணமுடித்தோ தங்கள் மேலான ஆயுத பலத்தை பயன்படுத்தியோ, இந்த மையங்களில் அதிகாரம் பெற்றிருக்கலாம். இவ்வாறு எதுவும் நடக்காத மையங்களில் தூரத்து வணிகர் புகுத்திய பண்பாட்டைத் தழுவிய சுதேசத் தலைவர்கள் சமஸ்கிருதமயமாக்கத்திற்கு வழிவகுத்திருக்கலாம்.

### காலக்கணிக்கு

இவ்வாறு தென்னிந்தியா-இலங்கைப் பிராந்தியத்து வர்த்தக மையங்களிலும் அதிகார மையங்களிலும் ஏற்பட்ட முன்னேற்றங்களைக் காலவரன் முறைப்படுத்தி ஒழுங்காகக் காட்டுவது கடினம்.

தற்பொழுது கிடைத்துள்ள தொல்லியல் சான்றுகளைக் கொண்டு தென்னிந்தியா-இலங்கைப் பிராந்தியத்தில் ஆதி இரும்புக் காலம் பொ.ஆர்.மு. 1000 அளவில் (இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன் தொடங்கியது எனலாம். பொ.ஆ. முதலாவது ஆயிரவாண்டின் தொடக்க நூற்றாண்டுகளில் இந்தியாவின் மேற்குக் கரை வழியாகவும் கிழக்குக் கரை வழியாகவும் தென்னிந்தியா-இலங்கைப் பிராந்தியத்துக்கு வந்த வணிகருடைய வர்த்தகம் துரிதமாக வளர்ச்சியடைந்தது. அந் த ஆயிரவாண்டின் நடுப் பகுதியளவில் தமிழ்நாட்டின் துறைகளிலும் இலங்கையின் துறைகளிலும் போகப் பொருட்கள் பெரிதும் வாங்கப்படும் (demand) நிலை உருவாகியது.

இக் கால கட்டத்தில் மதிரையை மையமாகக் கொண்ட குறுநில அரசுக்கும் தம்பபண்ணியை மையமாகக் கொண்ட குறுநில அரசுக்கும் இடையில் நெருங்கிய உறவுகள் இருந்தன என்பதில் ஐயமில்லை. ஒரு கட்டத்தில் இரு குறுநில அரசுகளும் ஓர் ஆதிக்கத்துக்குள் அடங்கியிருந்திருக்கலாம். தம்பபண்ணியில் ஆட்சி புரிந்தோராகப் பாளி வரலாற்றேடுகளில் குறிப்பிடப்படும் பண்டு குடும்பத்தினர் மதிரையின் பாண்டிய குடும்பத்தினருடன் உறவு கொண்டவர்களாக இருக்கமுடியும். பாளி மொழியில் பாண்டியர் என்ற 'பெயர் 'பண்டு' என வழங்கப்பட்டது.

ஆதி இரும்புக்காலம் முடிவடைந்த கட்டத்தில் தம்பபண்ணியில் இருந்த அதிகார பீடம் உள்நாட்டில் அனுராதகாமத்துக்கு மாற்றப் பட்டது என்று பாளி வரலாற்றேடுகள் மூலம் அறியக் கிடக்கின்றது.

அனுராதகாமத்தில் எழுச்சியுற்ற குறுநிலத் தலைவர்கள் தம்ப பண்ணி அடக்கியதால் இந்நிலை எழுந்ததோ அல்லது தம்பபண்ணியல் ஆட்சி செலுத்தி யோர் அனுராதகாமத்தைக் கைப்பற்றியதால் இந்நிலை எழுந்ததோ அல்லது வேறு கார ணிகள் இந்நிலையை உருவாக்கினவோ என்பது தற்பொழுதுள்ள சான்றுகளின் உதவி கொண்டு கூறக்கூடியதன்று. வடமேற்கு இலங்கைக் கரையில் இருந்த அதிகார மையம் அனுராதகாமத்துக்கு மாறியது போல், தமிழ் நாட்டின் தென் கரையில் மதிரையில் இருந்த அதிகார மையம் சிறிது காலம் கபாடபுரத்துக்கு மாற்றப்பட்டு, இறுதியில் உள்நாட்டில் புதிய ஒரு மதிரைக்கு மாறியது. பழைய மதிரை தென்மதிரையாகியது. பொ.ஆ.மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மதிரையும் அனுரா தகாமமும் இரு தனி இராச்சியங்களின் அதிகார மையங்களாக எழுச்சியுற்றிருந்தன.

### மொழியும் எழுத்தறிவும்

முன்னிருந்த அரசியல் அமைப்புக்களை விட, முன்னேற்றமான, உயர் நிலையி லான அரசு ஒன்று (அல்லது பல அரசுகள்) தோன்றியபோது கூடவே குறிப்பிடத்தக்க சமூக பண்பாட்டு முன்னேற்றங்களும் ஏற்பட்டன.

இவற்றுள், மொழி மற்றும் எழுத்தறிவு ஆகிய துறைகளில் இடம்பெற்ற முன்னேற்றங்கள் அடங்கும். முன்னேற்றமான ஆ.இ.கா. பண்பாடு இடைக்கற் கால மக்கள் மத்தியில் பரவியபோது, முன்னர் பேசப்பட்ட மொழி (அல்லது மொழிகள்) வளர்ச்சி பெறத் தொடங்கியிருக்கும். அல்லது, ஒரு வளர்ச்சியுற்ற மொழி (அல்லது மொழிகள்) இடைக்கற் கால மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும்.

ஆதி இரும்புக் காலப் பண்பாட்டை அறிமுகப் படுத்தியோர் தங்கள் மொழியையும் கூடவே அறிமுகப்படுத்தி இருப்பர். அவர்களைப் போன்று, தூரத்து வணிகர்களும் தம் மொழிகளை அறிமுகப் படுத்தியிருப்பர்.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

ஆதி இரும்புக் காலப் பண்பாட்டைப் பரப்பியோர் பேசிய மொழி பற்றிப் பல கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். ஆ.இ.கா. பண்பாட்டைப் பரப்பியோர் பேசிய மொழியையோ, இடைக் கற்கால மக்கள் பேசிய மொழிகளையோ அடையாளம் காண்பது அறிஞர்களை எதிர்நோக்கும் ஒரு கடினமான பிரச்சினை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தாழி அடக்கங்களும் பிற பெருங்கற் பண்பாட்டுத் தொல்பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்துப் பல கருத்துக்கள் பெருங் கற் பண்பாட்டு மக்கள் பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தெரிவிக்கப்பட்ட கருத்து களுள் தொடக் கத்திலேயே தெரிவிக்கப்பட்ட ஒரு கருத்தா கவும் இன்றும் பரவலாகப் பலரும் ஏற்றுக் கொள்ளும் ஒரு கருத்தாகவும் இருப்பது பெருங்கற்கால (ஆதி இரும்புக் கால)ப் பண் பாட்டைப் பரப்பியோர் திராவிட மொழிகளைப் பேசிய மக்கள் என்பதாகும். (தொடரும்)

# எயிட்ஸ்/எச்.ஐ.வி. அதிகரிப்பை தூண்டக்கூடிய சமகால மாற்றங்களும், தடுப்பதற்கான அணுகுமுறைகளும் 1

''2015ஆம் ஆண்டளவில் எச்.ஐ.வி/ எயிட்ஸ் நோயினை நிறுத்தி அதன் பரம்பலை பின் திருப்புதல்'' இலங்கையில் மிலேனிய அபிவிருத்தி இலக்குகளின் வகைப்பாட்டில் ஒன்றாக விளங்குகின்றது.

புதிய நூற்றாண்டின் இலக்குகள் என்ற பெருந்தலைப்பில் ஐ.நா.சபை அங்கத்துவ நாடுகள் 2015 இல் HIV மற்றும் எயிட்ஸ் நோய்க்கு எதிராகப் போராடுதல் பற்றியும் ''பிள்ளைகளுக்குப் பொருத்தமான ஓர் உலகம்'' என்னும் வகையில் முதன்மைப் படுத்திய செயற்பாடுகள் ஊடாக எயிட்ஸ்/எச்.ஐ.விக்கு எதிராகப் போராடுதல் வலியுறுத்தப்படும் சிந்தனைகளாக சமகால நிலவரத்தில் இடம்பெறுகிறது.

தாராளமயமாக்கல், நவீனத்தும், உலகமயமாக்கல் சிந்தனையின் விரிவாக்கங்களினால் சமூக கட்டமைப்பு ஒழுங்கில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டே உள்ளன. இத்தகைய சிந்தனைகளின் பின்னணியில் முகிழ்ப்புப் பெற்ற நோயாக எயிட்ஸ்/எச்.ஐ.வி காணப்படுகிறது.

தனி மனித விருத்தி நிலைகளையும், சமூக அபிவிருத்தி நிலைகளையும் கூறுபோட்டு முழு சமூக ஒழுங்கமைப்பில் சிதறல் நிலைமைகள் ஏற்படக் காரணமாக அமைந்துள்ளது.

தரமான அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைப் பண்புச்சுட்டி நிலைகளைப் பாதிப்பதாகவும், நிலைத்து நிற்கக் கூடிய அதாவது, பேண்தகு அபிவிருத்திப் போக்குகளை கேள்விக்குறியாக்கும் காரணியாகக் கூட சமகாலத்தில் இந் நோய் பரிணாமம் பெற்றுள்ளது. நாட்டின் அபிவிருத்திப் பண்புச் சுட்டிகளை தீர்மானிக்கும் காரணியாகக் கூட செல்வாக்குப் பெற்றுள்ளது. தேசத்தின் சமூக பொருளாதார கலாசார காரணிகளை ஆரோக்கியமுள்ளதாகவோ அல்லது ஆரோக்கியமற்றதாகவோ மாற்று சக்தியாக வலுப்பெற்றுள்ளது.

### எச்.ஐ.வி எயிட்ஸ் வரலாறு

நோய் நிலைமை முதல் முதலில் அமெரிக்க ஐக்கிய குடியரசிலேயே இனங் காணப்பட்டது.

**சர்வதேச HIV/AIDS தினம் தொடர்பாக நடத்தப்பட்ட திறந்த கட்டுரைப் போட்டியில் முதல் இடத்தைப் பெற்ற ஆக்கம்**

1981ஆம் ஆண்டு அமெரிக் காவில் லொஸ் ஏஞ்ஜலஸ் நகர வைத்திய சாலைகளில் சிகிச்சை பெறச் சென்ற இளம் வயதான ஆண் நோயாளர்களில் சிலருக்கு உடலில் நீர்ப்பீடனத் தொகுதி நலிவடைந்து இருந்தமை இனங்காணப்பட்டு, அவற்றின் நோய் குணக்குறிகள் பற்றி மேலும் ஆய்வு செய்து பார்த்தபோதே இந்நிலைமை அறியப் பட்டது நடத்தை ரீதியாக அவர்களை ஆராய்ந்த போது தன்னினச் சேர்க்கையில் ஈடுபடுவோர் என்பது அறியப்பட்டது.

இதற்கு வைரசே காரணம் எனவும் அதற்குHIV எனவும் பெயரிட்டனர். இதனை மானுட நீர்ப்பீடனக் குறைபாட்டு வைரசு எனக் குறிப்பிடுவர்.

H-Human (மானுட) I-Immunadeficaiany (நீர்ப்பீடனக்குறைபாட்டு) V-Virus (வைரசு) என இதன் கருத்து நிலைகள் விரிவுபட்டன.

HIV-I ,HIV-II என இருவகைப்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளன.

ஆபிரிக்க நாடுகளில் வாழும் பச்சை நிறக் குரங்குளில் இருந்து தோற்றம் பெற்றமை அறியப்பட்டது.

ஆபிரிக்க தேச பழங் குடி யினர் இக் குரங்குகளின் இறைச்சி, இரத்தத் தைப் பச்சையாக உட்கொள்ளும் பழக் கத்தைக் கொண்டுள்ளமையும், அதன் நிமிர்த்தம் வைரசு மனித உடலுக்கு உட் புகுந்து படிப்படியாக பல மாற்றங்களுக்கு உட்பட்டு வருகின்றது.

பொதுவான சூழலில் HIV வாழ முடியாது. உயிர் வாழ உயிர்க்கலன்கள் தேவை என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

எயிட்ஸ் என்பதன் விரிவாக்கம் A-Acquired (பெற்ற) I-Immume (நீர்ப்பீடன) D-Deficieng (குறைபாட்டு) S-Syndrome (சிக்ஸ்) என அமைந்துள்ளது. தமிழில்


பரராஜசிங்கம் ஸ்ரீராஜேஸ்வரன்
ஆசிரியர்
யா/சரவணை சின்னமடு றோ.க.த.க.பாடசாலை

நீர்ப்பீடன குறைபாட்டு சிக்கல் என வழங் கப்படுகிறது.

### HIV தொற்றும் வழிமுறைகள்

எச்.ஐ.வி.தொற்றுக்கு 84.9% பாலியல் தொடர்புகளே முக்கியமானது.


தொற்றுள்ள குருதியை பாய்ச்சுதல், மாசடைந்த ஊசி புகுத்தி மற்றும் உபகரணங்களைச் சுத்தம் செய்யாமை குருதி மூலம் 1.6% பரவு தலையும், 0.8 வீதம் தாயிடமிருந்து பிள்ளை களுக்கும், 13.9%தன்னியக்க சேர்க்கை யாளர் ஊடாகவும் பரவல் அடைகிறது.




### ஆபத்துக்கூடிய இலக்கினர்

நோயின் தாக்கத்திற்கு உள்ளடக்கக் கூடிய ஆபத்து இலக்கினர் என்பது கடினமான அமைப்பைக் கொண்டது.

பாலியல் சார்ந்த தொழிலாளர்களும் ஒன்றுக்கு மேற்பட்ட பாலியல் தொடர்பு வைத்திருப்போர், தன்னினச் சேர்க்கையாளர், பால் உறுப்புகளில் புண்காயம் உள்ளோர், நாளத்தின் ஊடாகப் போதைப் பொருள் ஏற்றுவோர், தொற்றுள்ள தாய்க்கு பிறக்கும் குழந்தைகள் என சமூக மட்டத்தில் தொற்றுக்குள்ளாக்கக் கூடிய வாய்ப்பை அதிகம் கொண்ட கட்டமைப்புக்களாக உள்ளன. (தொடரும்)



Lifeline
மீண்டும் வாழ்வோம்
இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்
Humanitarian Information For IDPs


# கிளிநொச்சி கைப்பற்றப்பட்ட பின்னரும் தொடரும் இடம் பெயர்வு

தொடர்ச்சியான மோதல்களை அடுத்து கிளிநொச்சி நகரில் இலங்கை இராணுவம் தனது நிலைகளைப் பலப்படுத்தி வருகின்றது. மோதல்கள் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்கனவே இடம்பெயர்வுக்கு உள்ளான மற்றும் நிரந்தர வதிவிடவாளர்களென சுமார் நாற்பதாயிரம் பேர் புதிதாக இடம் பெயர்வுக்கு உள்ளாகியிருப்பதாகவும் இவர்கள் தொடர்பில் கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மக்களின் இடம்பெயர் நகர்வுகள் வவுனியாவை நோக்கியதாகவே இருக்க வேண்டுமென இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார். அம் மக்கள் கிளிநொச்சி அல்லது வவுனியா நோக்கி வரலாம். எனினும் தற்போதைய சூழ் நிலையில் வவுனியாவிற்கு வருவதே சிறந்தது. அங்கு அவர்களை தங்கவைப்பதற்கான கட்டமைப்புக்கள் உள்ளன. கிளிநொச்சியில் நிலக் கண்ணிவெடிகள் இருப்பதனால் அங்கு குடி மக்கள் அமர்வது சிரமம் என்றார்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வட்டக்கச்சி, முரசுமோட்டை, ஊரியன் மற்றும் கண்டாவளை பிரதேசங்களைச் சேர்ந்த மக்களே அதிகளவில் இடம்பெயர்ந்துள்ளனர். இதே வேளை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தர்ம புரம், விஸ்வமடு மற்றும் கண்ணகிநகர் பிரதேசங்களில் தற்போது அண்ணளவாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் வாழ்ந்து வருவதாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந்நிலையில் வன்னியிலிருந்து வவுனியாவிற்கு தற்போது 965 பேர் வருகை தந்துள்ளனர். வவுனியாவிலுள்ள மெனிக்பாம் முகாமில் 156 குடும்பங்களைச் சேர்ந்த 376 நபர்களும் நெலுக்குளம் முகாமில்245 குடும்பங்களைச் சேர்ந்த 589 நபர்களும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 75 குடும்பங்களுக்கு தற்காலிக இருப்பிடங்கள்




வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை, மேலதிகமாக வன்னியிலிருந்து மக்கள் வருவார்களாயின் அவர்களுக் கென அடம்பன்குளம் மற்றும் பூசணிப்பிட்டிஆகிய இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இராணுவத்தினரின் அனுமதி கிடைத்த பின் பூர்வாங்க வேலைகளை ஆரம்பிக்கவுள்ளதாக வவுனியாஅரசாங்க அதிபர் திருமதி சார்ள்ஸ் தெரிவித்தார்.

வவுனியா நோக்கி மக்கள் இடம்பெயர்வதைப் போல் மன்னாரை நோக்கியும் மக்கள் இடம்பெயர்ந்துசெல்கின்றனர். வன்னியிலிருந்து ஏற்கனவே வருகை தந்த மக்களில் 136 குடும்பங்களைச் சேர்ந்த 310 பேர் சிறுகண்டல் முகாமிலும் 224 குடும்பங்களைச் சேர்ந்த 501பேர் களிமோட்டை முகாமிலும் 63 குடும்பங்களைச் சேர்ந்த 260 பேர் நானாட்டான் அரிசி அரைக்கும் ஆலையிலும் 34 குடும் பங்களைச் சேர்ந்த 127 பேர் நானாட் டான் கிறிஸ்தவ ஆலய வளாகத்திலும்தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேலும் அண்மை நாட்களாக வருகை தந்த 17 குடும்பங்களைச் சேர்ந்த 52 பேர் வண்ண ாமோட்டையில் தங்கவைக்கப்பட்டுள் ளனர். இவர்களை மன்னார் இலுப்பைக் குளம் பகுதியில் பிறிதொருஇடத்தில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

தெரிவு செய்யப்பட்ட இடத்தை துப்பரவு செய் தல் அம்மக்களுக்குத் தேவையான அவசர உதவிகள், சுகாதார வசதிகள் போன்றவற்றை மன்னார் சர்வோதய அமைப்பினர் வழங்கி வருவதாக அம்மாவட்டத்தின் சர்வோதய இணைப்பாளர் எஸ்.யுகேந்திரன் குறிப்பிட்டார்.



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எவ்.எம். வானொலியூடாக சனிக்கிழமை களில் காலை 6 மணிமுதல் 8 மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எவ்.எம். வானொலியூடாக (F.M. 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பி.ப. 1.30 மணி முதல் 2 மணி வரையும் புத்தளப் பிரதேசத்தின் அநூர் எவ்.எம் ஊடாக ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 6.45 முதல் 7.15 மணி வரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை (WWW.Internews. lk.Radio.Voices of peace.lk ) என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

## மீண்டும் வாழ்வோம்

"மீண்டும் வாழ்வோம்" திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து முகாம் களில் வாழும் மக்களுக் காகவும் மீள்குடியேறி உள்ள வர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்து பட்ட மனி தாபிமான செயற்றிட்ட அமைப் புக்களின் ஓர் அங்கமாகும்.

## சுவடுகள்

அரசாங்க அதிபர்களின் தகவல் களின் அடிப்படையில் திரட்டப்பட்ட IASC 159 ஆவது அறிக்கையின் படி இலங் கையில் 17ஆயிரத்து 258 குடும்பங்க ளைச் சேர்ந்த 58ஆயிரத்து 162 பேர் (வன்னி நீங்கலாக) அகதிகளாக இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

யாழ். குடாவில் நிகோட் அமைப்பினால் கடந்த 5 வருடங்களாக முன்னெடுக் கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது 1425 மில்லியன் ரூபா வரையிலான நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. முன்னெடுக்கப்பட்ட 199 திட்டங்களில் 150 திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப் பட்டு விட்டதாகவும் எஞ்சியவை இவ்வாண்டு ஆகஸ்ட் மாதத்தில் முடிபு பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உங்கள்எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

மீண்டும் வாழ்வோம்
தொடர்பான உங்கள்
மேலான எண்ணங்களையும்
படைப்புக்களையும் எதிர்பார்க்கிறோம்
நீங்கள் ஓவியம் வரையும் ஆற்றல் மிக்கவர் எனில்
உங்கள் அனுபவங்களை சித்தரிக்கும் ஓவியங்களை
வரைந்து எமக்கு அனுப்பி வையுங்கள்
அவற்றை மீண்டும் வாழ்வோம்
பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

த.பெ.இல.1039 கொழும்பு
தொ.பே. -0774952242
மின்னஞ்சல்-info@lifeline srilanka.co

## சாளரம்

வன்னியிலிருந்து தற்போது மக்கள் வவுனியாவை நோக்கி இடம்பெயர்ந்து வருகின்றனர். இவ்வாறு வருகின்ற மக்கள் தொடர்பாக எவ்வாறான விடயங்களை வவுனியாவிலுள்ள மக்கள் அறிந்து வைத்திருக்கின்றனர். மற்றும் இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களுக்கு எப்படியான உதவிகளை வழங்க திட்டமிட்டுள்ளனர். என்பது பற்றி வவுனியாவில் உள்ள சிலரிடம் வினவியபோது அவர்களிடம் இருந்து கிடைத்த பதில்கள்

நபர் 1: அவர்கள் குறித்து எங்களுக்கு சரியாக எதுவும் தெரியாது.அவர்கள் இங்கு வந்து நெலுக்குளம், மெனிக்பாம் முகாம்களில் இருப்பதாகச் சொல்கின்றனர். அவர்களுக்கு வவுனியா கச்சேரியால் உதவி செய்கின்றார்களாம். எனினும் அவர்களுக்கு உதவி செய்யுமளவிற்கு நாங்கள் வசதியானவர்கள் அல்ல.

நபர்: 2 பெருந்தொகையானோர் வந்திருப்பதாகத்தெரியவில்லை.விடுபட்ட பகுதியிலிருந்து சிலர் வந்து கொண்டிருக்கிறார்கள். நேரடியாக சென்று பார்க்கவில்ல்லை. அரசாங்கம் மற்றும் அரச அலுவலர்கள் அல்லது நிறுவனங்கள் மூலம் வந்து எம்மிடம் உதவி கேட்டால் நாங்கள் அவர்களுக்கு உதவி செய்வோம். ஆனால் இதுவரையாரும் வரவில்லை. பொருட்களையோ உடுபுடவைகளையோ எங்களால் வழங்க முடியும்.

நபர்:3 வன்னியிலிருந்து வருகின்ற மக்களை பிரதேசசெயலகம் மூலமாக மெனிக்பாமில் கொண்டு குடியமர்த்துவதாக அங்கிருந்து வருகின்ற மக்கள் தெரிவிக்கின்றார்கள். அவ்வளவுதான் எங்களுக்குத் தெரிந்தது.அவர்கள் நகருக்கு வரவில்லை. அனைவரும் மெனிக்பாமில்தான் உள் ளார்கள். ஏதோனும் தேவை இருப் பின் தாம் நகர்ப்புற கடை களுக்கு வருகை தந்துபெற் றுக் கொள்வோம் என பிரதேச செயலாளர் தெரிவித் திருக்கின்றார்.

அவர்களுக்கு உதவவேண்டும் என்பதுதான் அனைவரது விருப்பமும். இருந்தாலும் ஒரு தலைமைத்துவம் இருந்தால் தான் அவர்கள் மூலம் நாங்கள் உதவி செய்ய முடியும்.

பிரதேச செயலாளர் அவர்களுக்கு சகல உதவிகளையும் செய்து கொடுக்கிறார்.வர்த்தக சங்கம் மூலம் அவர்களுக்கு நாங்கள் பண உதவி செய்திருக்கின்றோம்.

## உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில்உங்கள்கதைகள் இடம்பெறக் காத்திருக்கின்றன. ஒவ்வொருநிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத் தருகின்றோம். வடக்கு கிழக்குப் பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்களால் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்கு வாகன விபத்துக்கள் குறித்து எடுத்துக்கூறும் வகையில் கவனக்குறைவு குறு நாடகம் அமைந்தது. குறுநாட கத்தின் தொகுப்பு கீழே தரப்படுகின்றது.

### கவனக் குறைவு



மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் குறு நாடகப் பகுதியில் வாராவாரம் மக்கள் அறிந்திருக்க வேண்டிய விடயங்களை நாடக வடிவில் ஒலிபரப்புகின்றோம். கடந்தவார நிகழ்ச்சியில் கவனக் குறைவு என்ற நாடகம் ஒலிபரப்பாகியது.

உலகளாவிய ரீதியில் சாலை விபத்துக்களால் பல உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. சாலை விபத்துக்கள் ஏற்படுவதற்குரிய முக்கிய காரணம் மனிதர்களுடைய கவனக் குறைவுதான். ஒரு நொடிப் பொழுதில் ஏற் படும் விபத்துக்களால் எத்தனையோ இழப்புகளை நாம் தினம் தினம் ஊடகங்கள் வாயிலாக அறிந்த வண்ணமே தான் உள்ளோம்.

வீதியில் சென்று கொண்டிருந்த ஒரு வயோதிபப் பெண் எதிர்பாராமல் முச்சக்கர வண்டியில் அடிபட்டு விபத்துக்குள்ளாகிறார். பின்பு மயக்கமான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்படுகிறார். இந்தச் சம்பவத்தின் பின்பு நடைபெறும் உரையாடல்களின் மூலம் சாலை விபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள், தவிர்க்கப்பட வேண்டிய விடயங்கள பற்றிக் கூறப்படுகிறது.

வாகன ஓட்டுனர்கள், பாதாசாரிகள் இருவருமே சாலை விதிமுறைகளைப்பற்றி கட்டாயமாக அறிந்திருக்க வேண்டும். அவற்றை உரிய முறையில் கடைப்பிடிக்கவேண்டும். வாகன ஓட்டுனர்களுக்கென்று பொதுவாக சில விதிமுறைகள் உண்டு. மோட்டார் சைக்கிளில் சொல்பவர்கள் கட்டாயமாக தலைக் கவ சத்தை அணிய வேண்டும். வாகன ஓட்டுனர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தக்கூடாது. மது போதையில் வாகனம் செலுத்துபவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனைகள் உள்ளன. அடுத்து வாகனம் ஓட்டும் போது கையடக்கத் தொலைபேசிப் பாவனையை தவிர்த்துக் கொள்ள வேண்டும். வாகன ஓட்டுனர்கள் மட்டுமல்ல, பாதாசாரிகளும் வீதியில் நடந்து செல்லும்போதும் கையடக்கத் தொலைபேசியில் உரையாடும்போது அவதானத்துடன் செல்ல வேண்டும். வாகன ஓட்டுனர்கள் குறிப்பிட்ட வேகத்தில் வாகனங்களைச் செலுத்த வேண்டும். வீதியில் பயணிக்கும் போது வீதி சமிக்ஞைகளை அவதானிக்க வேண்டும். பாதசாரிகள் வீதியை கடக்கும் போது பாதசாரிக் கடவையைப் பயன்படுத்த வேண்டும். அதே போல் புகையிரத கடவைகளை கடக்கும் போது அவதானத்தடன் இருக்க வேண்டும். பாதுகாப்புக் கதவுகள் பூட்டப்பட்டிருக்கும் போது புகையிரதப் பாதையை கடக்கக் கூடாது.

உங்களுடைய அவசரப் போக்கினால் உங்கள் உயிருக்கே ஆபத்து ஏற்படும். இந்த விடயங்கள் குறித்து நீங்கள் நிச்சயமாக அறிந்திருப்பீர்கள். ஆனாலும் நடைமுறை வாழ்க்கையில் நாம் அவற்றைக் கடைப்பிடிப்பது குறைவு. எம்முடைய கவனக் குறைவினால் ஏற்படும் விளைவுகள் பற்றி கட்டாயமாக நாம் சிந்திக்க வேண்டும். இதை வலியுறுத்துவதாகவே கவனக்குறைவு நாடகம் அமைந்திருந்தது.

மீண்டும் வாழ்வோம்நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் பகுதிக்கு உங்கள் வாழ்க்கையில் இடம் பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள். இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளாக ஒலி பரப்பக் காத்திருக்கின்றோம். உங்கள் கதைகள் மற்ற வர்களுக்கும் படிப்பிணையாக அமையும் என்பதே மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் எதிர்பார்ப்பாகும்.

# ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் தொடர்பில் பாதுகாப்பு செயலரின் கருத்துக்கள் அடிப்படையற்றவை

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்த கருத்துக்கள் அடிப்படையற்றவை. நிராகரிக்கப்பட வேண்டியவை. நீதியை மிதித்து ஊடகத்தின் குரல்வளையை நசுக்கும் மிகப் பாரதூரமான செயற்பாடுகளையே அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம்சாட்டினார். சிரச மீதான தாக்குதல், லசந்தவின் படுகொலை ஆகியவற்றின் வரிசையில் ஊடகவியலாளர் ஷிவோன் டேனியல் இன்று ஒளிந்து வாழும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஜனநாயக உரிமை பறிக்கப்பட்ட இந்த நாட்டை மாற்றியமைப்பது குறித்து எதிர்க்கட்சிகள் மிக நிதானமாக செயற்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார்.

கொழும்பு ஹேம்பிரிஜ் டெரசில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஊடகங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும், ஊடகவியலாளர்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென்றும் கூறி சில மணிநேரம் கழிவதற்கு முன்னரே அதே ஊடக சுதத்திரம் அச்சுறுத்தலுக்கு இலக்காகியுள்ளது.

ஊடகவியலாளர் ஷிவோன் டேனியல் வன்னியில் படையினரின் பாரிய வெற்றிகள் குறித்தும் அதேநேரம் சிரச மீதான தாக்குதல் மற்றும் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையூடான ஊடக அச்சுறுத்தல் குறித்தும் சி.என்.என். செய்திச் சேவைக்கு வழங்கிய தகவல்கள் புலிகளுக்கு ஆதரவானவை என்றும் அத்துடன், குறித்த ஊடகவியலாளர் புலிகளுடன் தொடர்புடையவர் என்றும் கூறி அவரைக் கைது செய்யவேண்டுமென்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் முன்னர் தெரிவித்திருந்தார்.

அதேபோல், சிரச நிறுவனம் புலிகளின் குரல் என்றும் வர்ணித்திருந்த அவர் நீதிமன்றத்தால் குற்றமற்றவர் என்றும் கூறப்பட்ட பரமேஸ்வரியையும் புலி உறுப்பினர் என்றும் கூறியிருக்கின்றமை பொருத்தமற்றவை; அடிப்படையற்றவை இதனை நான் முற்றாக நிராகரிக்கிறேன். நீதியை மிதித்து ஜனநாயக உரிமையை அச்சுறுத்தி அதன்மூலம் ஊடகத்தினதும் ஊடகவியலாளர்களினதும் குரல்வளையை நசுக்கும் ஒரு பாரதூரமான கலாசாரத்தையே அரசாங்கம் கடைப்பிடித்து வருகின்றது.

ஊடகவியலாளர்கள் ஒவ்வொருவரும் இன்று வாழ்வதற்கு முடியாத உயிர் பிரச்சினைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். நாட்டு மக்களுக்கு இது பாரிய பிரச்சினையாகும். ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்படுகின்ற அதேவேளை, ஊடகவியலாளர்களின் உயிர்களும் பாதுகாக்கப்படவேண்டும் என்பதில் ஐக்கிய தேசியக் கட்சி மிகக் கவனமாக இருக்கின்றது.

குற்றமற்றவர்களை புலிகளாக சித்தரிக்க முயலக்கூடாது. கைதுசெய்யும் நடவடிக்கைகளை பொலிஸார் பார்த்துக்கொள்ள வேண்டும். அதேபோல், பொலிஸாரும் பொறுப்புள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எமது நாட்டில் ஜனநாயகத்திற்கான உரிமை பறிக்கப்பட்டுவிட்டது. சகல உரிமைகளும் இழந்தவர்களாக மக்கள் இருக்கின்றனர்.

இதனை சீர்செய்யவும் ஊடக சுதந்திரத்தை பாதுகாக்கவும் இன்று எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. இதனை வலுப்படுத்தவும் நாட்டைக் காக்கவும் பேதம் மறந்து சகலரும் ஒன்றிணைய வேண்டும் என்றார். (ஓ-6)

# வீட்டுப் பணிப்பெண்களாக வேலைக்குச் சென்றவர்கள் வீடு திரும்பிய பரிதாபம்

சவூதி அரேபியாவில் வீட்டுப் பணிப் பெண்களாக வேலைக்குச்சென்று அங்கு பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த நிலையிலிருந்த இலங்கைப் பணிப் பெண்கள் 50பேர் நேற்று மீண்டும் நாடு திரும்பியுள்ளனர்.

இவ்வாறு நாடு திரும்பியவர்கள் சவூதி அரேபிய முகாம்களில் நீண்டகாலமாகத் தங்கியிருந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் அனைவரும் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் 2 விமானங்கள் மூலம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்ததாக எமது விமான நிலைய செய்தியாளர் தெரிவித்தார். (ஓ-6)

# மேனனுடன் நடத்திய பேச்சுவார்த்தையை பகிரங்கப்படுத்துமாறு ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சிவ்சங்கர் மேனனுடன் அரசாங்கம் நடத்திய பேச்சுவார்த்தை பகிரங்கப்படுத்தப்பட வேண்டுமென ஜே.வி.பி.கோரிக்கை விடுத்துள்ளது.

மேனனுடன், அரசாங்கத்தின் உயர்மட்டக் குழுவினர் நடத்திய பேச்சுவார்த்தைகள் மற்றும் மேனன்கூறிய கருத்துக்கள் போன்றவற்றை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டுமென ஜே.வி.பி.விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

புலிகளை பாதுகாப்பதற்கே இந்தியா முயற்சிப்பதாகவும், இலங்கையை இரண்டாகப் பிரித்து புலிகளுக்குத் தனி நாடொன்றைப் பெற்றுக்கொடுக்கவே இந்தியா நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் ஜே.வி.பி.தெரிவித்துள்ளது.

இலங்கை விடயத்தில் தலையிடும் உரிமை இந்தியாவுக்கு இல்லை எனவும் விடுதலைப் புலிகளைப் பாதுகாக்கும் வரலாற்றையே இந்தியா கொண்டிருப்பதாக குறிப்பிட்டிருக்கும் ஜே.வி.பி. இவ்வாறானதொரு நோக்கத்துடனேயே சிவ்சங்கர் மேனன் இலங்கை வந்திருப்பதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளது. மேனனின் இலங்கை விஜயம் பற்றி , இலங்கை அரசாங்கம் பெரியளவில் பகிரங்கப்படுத் தவில்லையெனவும் இதில் ஏதோவொரு சதி இருப்பதாகவும் ஜே.வி.பி கூறியுள்ளது.

யுத்தம் தொடர வேண்டுமென்பதே தமது நிலைப்பாடு எனக் குறிப்பிட்டிருக்கும் ஜே.வி.பி சிவ்சங்கர் மேனனுடன் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் பகிரங்கப்படுத்தப் படுவது அவசியம் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஓ-6)

# பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் 79பேர் கைது

(கராச்சி)

பாகிஸ்தானில் கராச்சி நகரில் தலிபான் தீவிரவாதிகள் 79 பேர் கைது செய்யப்பட்டனர். அப்போது நிகழ்ந்த மோதலில் பொலிஸார் இருவர் கொல்லப்பட்டனர்.

கராச்சி நகரில் தலிபான் தீவிரவாதிகள் இருப்பது குறித்து கிடைத்த ரகசியத் தகவலையடுத்து பொலிஸாரும், உளவுத் துறையினரும் குறிப்பிட்ட இடத்தை சுற்றி வளைத்தனர்.

அப்போது கராச்சி தீவிரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸ் தலைவர் ஃபாரூக் ஆவன் மற்றும் 2 உளவுத்துறையினரை தீவிரவாதிகள் பிணைக் கைதிகளாகப் பிடித்தனர். அவர்களது கால்களில் துப்பாக்கியால் தீவிரவாதிகள் சுட்டுள்ளனர். துப்பாக்கிச் சத்தம் கேட்டு உள்ளே நுழைந்த பொலிஸாரை நோக்கி தீவிரவாதிகள் சுட்டதில் பொலிஸார் இருவர் இறந்தனர்.

உளவுத் துறை அதிகாரிகள் மூவர் உட்பட பாதுகாப்புப் படையினர் 7 பேர் காயமடைந்தனர்.

எனினும், இந்த மோதலையடுத்து 79 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டதாக கராச்சி காவல்துறைத் தலைவர் வாசிம் அகமது தெரிவித்தார்.

அவர்களிடம் இருந்து ஏராளமான நவீன ரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். தொழிலதிபர் ஒருவரை கடந்த ஆண்டு கடத்தியதாகக் குற்றம்சாட்டப்பட்ட தீவிரவாதி ஒருவரும் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். (ஓ-6)

# புதிய ஜனாதிபதி ஒபாமாவுக்கு பாதுகாப்பு வசதிகளுடன் புதிய கார்



அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள பராக் ஒபாமாவால் உபயோகப்படுத்தப்படவுள்ள புதிய கார் ஒன்றின் புகைப்படங்கள் முதல் தடவையாக வெளியிடப்பட்டுள்ளன. 'த பீஸ்ட்' என புனைபெயரால் அழைக்கப்படும் இந்தக் காரானது, எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள ஒபாமாவின் பதவியேற்பு வைபவத்தில் பங்கேற்கவுள்ளது. இந்தக் காரானது அதி நவீன தொடர்பாடல் தொழில் நுட்பம் ,முன்னேற்றகரமான பாதுகாப்பு வசதிகள் என்பவற்றைக் கொண்டுள்ளதாக பாதுகாப்பு நடவடிக்கைகள் அலுவலக உதவிப் பணிப்பாளர் நிகொலஸ் தரோடா தெரிவித்தார்.எனினும், அந்தக் காரிலுள்ள பாதுகாப்பு வசதிகள் தொடர்பான தகவல்கள் இரகசியமாகப் பேணப்பட வேண்டியுள்ளதால் அவற்றை வெளியிட முடியாதுள்ளதாக அவர் கூறினார்.

இந்தக் கார் குண்டு துளைக்காத கண்ணாடிகள்,ஆயுதவசதி,பிரத்தியேக ஒட்சிசன் விநியோக அமைப்பு,இரசாயனத் தாக்குதல்களுக்கு எதிரன உள்ளகப் பாதுகாப்பு என்பவற்றைக் கொண்டமைந்துள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். (ஓ-6)

# பிரித்தானிய பிரஜாவுரிமைக்கு 10வருட காலம் காத்திருக்க வேண்டும்

## புதிய குடியேற்ற விதிகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை

பிரித்தானிய அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய குடியேற்ற நடைமுறைகள் காரணமாக, பிரித்தானியாவில் குடியேறுபவர்கள் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்க 10 வருட காலம் வரை காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.


குடியேற்றவாசிகளுக்கான புதிய பரிசோதனைகள்,நீண்ட நன்னடத்தை அவதானிப்பு காலம் என்பவற்றாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானிய அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட இந்தக் குடியேற்ற நடைமுறைகள் இந்த ஆண்டின் இறுதியில் நடைமுறைப் படுத்தப்படலாம் என எதிர்பாக்கப்படுகிறது. இத் திட்டப் பிரேரணையில் குடியேற்ற வாசிகளுக்கான சுகாதாரம் மற்றும் கல்விச் சேவைகள் தொடர்பில் புதிய குடியேற்ற வரியொன்றும் அறவிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை காலமும் நடைமுறையிலுள்ள குடியேற்ற நடைமுறைகளின் பிரகாரம் பிரித்தானிய பிராஜாவுரிமைக்கு விண்ணப்பிக்க விண்ணப்பதாரி இங்கிலாந்தில் 6 வருடங்கள் தங்கியிருந்தால் போதுமானதாகும். இந்நிலையில் மேற்படி காலம், 10 வருடங்களாக அதிகரிக்கப்படவுள்ளமை குறித்து குடியேற்ற வாசிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

மேலும் குடியேற்ற வாசியொருவர் பிரித்தானியாவில் தங்கியிருக்கும் காலத்தில் குற்றச் செயல்களில் ஈடுபடுவாராயின் அல்லது பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிப்பதற்கான பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவாராயின் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்க மேலும் பல வருட க ாலம் காத்திருக்க நேரிடும் எனக் கூறப்படுகிறது. (ஓ-6)

# இஸ்ரேலின் வான் தாக்குதலில் ஹமாஸ் தலைவர் சியாம் பலி



(பாலஸ்தீனம்)

பாலஸ்தீன காஸா பகுதியிலுள்ள ஹமாஸ் உயர்மட்ட தலைவர்களில் ஒருவர் வான் தாக்குதல் ஒன்றில் பலியாகியுள்ளதாக இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஹமாஸ் உள்துறை அமைச்சரான சியாம் காஸாவுக்கு அண்மையிலுள்ள தனது சகோதரரின் வீட்டில் இருந்தவேளை இஸ்ரே லிய விமானங்களின் தாக்குதலுக்கு இலக்காகி பலியாகியுள்ளதாகக் கூறப்படு கிறது.

மேற்படி போராளி குழுத் தலைவர் இறப்பதற்கு முன் இடம்பெற்ற இஸ்ரேலிய பீரங்கிகளின் தாக்குதலில், காஸா பிராந்தியத்திலுள்ள ஐக்கிய நாடுகள் நிவாரண முகவர் நிலையம் தீக்கரையாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காஸா பிராந்தியத்திலுள்ள பல்லாயிரக் கணக்கான ஹமாஸ் போராளிகளை கட்டுப் படுத்தும் பொறுப்பை ஏற்றிருந்த சியாமின் மரணம் ஹமாஸ் போராளிகளுக்கு பாரிய இழப்பு என்றே கருதப்படுகிறது.

இஸ்ரேலின் இந்த விமானத் தாக்குதலில் சியாமின் மகனும், சகோதரனும் ஏனைய இரு ஹமாஸ் உயர் மட்ட அதிகாரிகளான உள்துறை அமைச்சின் பாதுகாப்பு பணிப்பாளர் சாலெஹ் அபுஷார்க் மற்றும் ஹமாஸ் போராளிக் குழுவின் உள்ளூர் தலைவர் மொஹமட் அபு வட்பா ஆகியோரும் பலியாகியுள்ளனர்.கடந்த டிசம்பர் 27 ஆம் திகதி முதற் கொண்டு காஸா பிராந்தியத்தில் இஸ்ரேல் நடத்திவரும் படை நடவடிக்கையில் கொல்லப் பட்ட அதி உயர் மட்ட சிரேஷ்ட ஹமாஸ் தலை வராக சியாம் விளங்குகிறார்.

2004 ஆம் ஆண்டு ஷெய்க் யஸீன் மற்றும் அப்டெல் அஸீஸ் ரன்ரிஸ்ஸி ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட பின் ஹமாஸ் போராளிகளின் கூட்டுத் தலைமைத்துவத்தின் அங்கத்தவராக சியாம் சேவையாற்றி வந்தார். (ஓ-6)

# சிறுபான்மை இனங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்காவிடின் பிரச்சினை தீர்க்க முடியாது

## ஐ.தே.க முதன்மை வேட்பாளர் எஸ்.பி. திஸாநாயக்க

(கொழும்பு)



இலங்கை நாடு ஒரு சிறிய நாடு இந்த நாட்டில் சிங்கள மக்கள் போல் தமிழர்களும் முஸ்லிம்களும் சமமாக உரிமை பெற்று வாழ வேண்டிய சுதந்திரம் இருக்கின்றது.

இந்நிலையில் இன்றைய அரசாங்கம் பயங் கரவாதத்திற்கு எதிராக இராணுவ ரீதியில் வெற்றி பெற்றாலும் கூட அதிகாரங்களை சிறுபான்மை இனங்களுக்கு பகிர்ந்தளிக்காத பட்சத்தில் இனப் பிரச்சினைக்கு ஒரு நாளும் தீர்வு காண முடியாது என்று மத்திய மாகாண சபைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளர் எஸ்.பி. திசா நாயக்க தெரிவித்தார்.

புசல்லாவை மயூரா மண்டபத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்தாவது,

இந்த நாட்டில் தொடரும் இனப் பிரச் சினை காரணமாக எவரும் சுதந்திரமாக பேசவும் நடமாடவும் முடியாத நிலை இருந்து வரும் அதே நேரம் மலையக இளைஞர், யுவதிகள் நகரப் புறங்களுக்கு சென்று தொழில் புரிய முடியாத நிலை தொடர்கின்றது. இதற்கு முடிவு காண வேண்டும்.

இன்று இந்த நாட்டில் ஊடகத் துறையானது உண்மைகளையும் அட்டூழியங்களையும் பொதுமக்களுக்கு சுதந்திரமாக தெரி விக்க முடியாத நிலை தொடர்ந்து கொண்டே செல்கிறது. ஊடக நிறுவனங்கள் அடித்து நொறுக்கப்பட்டும் பல பெறுமதியான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டும் வருவதோடு பாராளுமன்ற நடப்புகளை வெளிக் கொண்டுவர முடியாத நிலை தோன்றியுள்ளது. இவை அனைத்திற்கும் இன்றைய அரசாங்கமும் ஊடகத்துறை அமைச்சரும் பொறுப்புக்கூற வேண்டும்.

ஆகவே இந்த நாட்டில் சகல இனங்களையும் சகல மதங்களையும் சகல நாடுகளையும் அரவணைத்து ஆட்சி அமைக்கக் கூடிய ஒரு கட்சியான ஐ.தே.கட்சிக்கு மத்திய மாகாண சபை தேர்தலின் போது வாக்களிக்க ஒவ்வொரு வரும் முன்வர வேண்டும் என்று தெரிவித்தார். (ஓ-6)

# யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களை மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கை

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ் நிலை காரணமாக பல வருடங்களாக இயங்காமல் இருந்த யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களை இயங்க வைக்கும் பொருட்டு அவற்றுக்கு மீண்டும் புத்துயிர் வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தின் முன்னாள் தலைவர் பசுமைப் புரட்சியாளர் வை.செகராஜசிங்கம் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

குடாநாட்டில் 796 சனசமூக நிலையங்கள் இயங்கி வருகின்றன. உள்ளூராட்சி மன்றங்களினால் நன்கொடையாக 2ஆயிரத்து 500 ரூபா முதல் 2 ஆயிரத்து 100 ரூபா வரை தரத்திற்கேற்றவாறு சன சமூக நிலையங்களுக்கு வழங்கப்படுகிறது.

சனசமூக நிலையங்களுக்கு நன்கொடையாக வழங்கப்படும் இப்பணத்தை பெறுகின்ற போதும் நல்ல முறையில் செயற்படாமல் இருக்கின்றன. எனவே சனசமூக நிலை யங்களை சுறு சுறுப்பாக இயங்க வைப்பதற்கு சமாசம் உருவாக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதால் இதற்கான நடவடிக்கையில் சம்பந்தப்பட்டவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். (ஓ-6)

# இடம் பெயர்ந்த வன்னி மக்களுக்கு யாழ். ஆயரின் உதவிகள்

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து மிருசுவில் , கத்தோலிக்க கன்னியர் மடத்திலும் றோ.க.த.க. பாடசாலையிலும் தஞ்சமடைந்துள்ள 650க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 850க்கும் அதிகமான மக்களுக்கு கடந்த 16ஆம் திகதி யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் , மறைமாவட்ட நிதியாளர் ஆகியோரின் வழி நடத்தலில் அத்தியாவசிய உணவு, ஆடைகள், பாத்திரங்கள் போன்ற நிவாரணப்பொருட்கள் வழங்கப்பட்டன. இவ் உதவித்திட்டம் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் நிதியிலி ருந்து வழங்கப்பட்டது என யாழ். ஆயர் இல்லம் தெரிவித்துள்ளது. (ஓ)

## தென்மராட்சி பிரதேச கலைஞர்களுக்கு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச இசை மற்றும் நாட் டுக் கூத்து கலைஞர்களின் விபரங்கள் தென் மராட்சிப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவி னரால் திரட்டப்படுகின்றது.

இசை மற்றும் கூத்து ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தென்மராட்சிப் பிரதேச கலைஞர்கள் தென்மராட்சிப் பிரதேசசெயலக கலாசாரப் பிரிவில் உரிய படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து நாளை மறு நாள் செவ்வாய்க் கிழமைக்கு முன்னர் கையளிக்கும் படி தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கேட் டுக்கொள்கின்றார். (ஓ-29)

## சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின கௌரவிப்பு விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரினால் 2008 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்கள் கௌரவிக்கப்பட உள்ளதுடன் கழகத்தால் நடத்தப்பட்ட ஆங்கில பாட நெறியினை பூர்த்தி செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளது. இந் நிகழ்வு இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் லயன் வி.வி. மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் என் .சத்தியநாதன் , சிறப்பு விருந்தினராக லயன் கே.வி.முத்துக்குமாரசாமி ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

தொடர்ந்து இந் நிகழ்வில் சக்கர நாற்காலி வழங்கலும், 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ் மொழி மூலம் தோன்றி தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற செல்வன் த. பாசுபதன் கௌரவிக்கப்படுதல், தென்மராட்சியில் சிறந்த கல்விப் பணி ஆற்றியமைக்காக பிரதம விருந்தினர் என். சத்திய நாதன் கௌரவிக்கப்படுதல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. (ஓ- 29)

# உழவர் விழா உதைப்பந்தாட்ட போட்டியில் இளவாலை யங்கென்றிஸ் சம்பியன்

(வட்டுக்கோட்டை)

அராலிமாவத்தை விளையாட்டுக் கழகத்தினரால் உழவர் விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி அண்மையில் அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் கழகத் தலைவர் ஆர். டுஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி உதைப் பந்தாட்ட போட்டியில் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக் கழகம் மோதியது.

போட்டி ஆரம்பமான நேரம் முதல் இரு அணிகளும் விறுவிறுப்பாக மோதியபோதும் இளைவாலை யங்கென்றிஸ் கழகத்திற்கு எதிராக பணல்டி மூலம் முதலாவது கோலினை நாமகள் விளையாட்டுக்கழகம் பெற்றுக் கொண்டது. தொடர்ந்து இளைவாலை யங் கென்றிஸ் விளையாட்டுக் கழக வீரர்களின் அபாரமான ஆட்டம் மூலம் நாமகள் விளை யாட்டுக்கழகத்திற்கு எதிராக ஒரு கோல் பெறப் பட்டு போட்டி சமநிலையில் இருந்தவேளையில் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையை தொடர்ந்து போட்டி ஆரம்பமான நேரம்முதல் இரண்டு அணிகளும் கோல்கள் பெற முயற்சித்த போதும் இரு அணிகளின் கோல்காப்பாளர்களின் முயற்சியினால் இரு அணிகளும் கோல்கள் பெறும் சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்பட போட்டி முடிவுற்றது.

மேலும் அணிகளின் வெற்றி வாய்ப்பை தீர்மானிப்பதற்காக இரண்டு அணிகளுக்கும் தலா ஐந்து பனால்ட்டி உதைகள் வழங்கப் பட்டன. தமக்கு கிடைத்த பனால்ட்டி உதைகளை சாதகமாகப் பயன்படுத்திய இளைவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழகம் 4-3 என்ற கோல் கணக்கில் தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இப்போட்டியின் நான்காம் இடத்தினை அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழகமும் மூன்றாம் இடத்தினை மானிப்பாய் ரெட்ரேஞ்சர் விளையாட்டுக்கழகமும் பெற்றுக் கொண்டது.

போட்டியில் வெற்றிபெற்ற கழகங்களுக்கான வெற்றிக்கிண்ணங்களை நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலி மேற்கு பிரதேச சபை செயலாளர் சு. புத்திசிகாமணி வழங்கி கௌரவித்தார். (ஓ-27)

# அச்செழு கிராம மக்களுக்கு வேல்ட் விஷன் நிறுவனம் உதவி

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அச்செழு கிராம சேவையாளர் பிரிவில் வேல்ட் விஷன் நிறுவனம் போயிட்டி கொலணி, ஆலசிட்டி ஆகிய கிராமங்களில் உள்ள ஐந்து வயதுக்கும் பதினெட்டு வயதுக்கும் இடைப் பட்ட பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு மாலை நேர இலவச வகுப்புகளை நடத்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இது சம்மந்தமான கலந்துரையாடல் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களை அழைத்து அச்செழு கிராம சேவையாளர் க.நாகேந்திரன் தலைமையில் போயிட்டிவினோபாஜி மண்டபத்தில் நடை பெற்ற போது வேல்ட் விஷன் பிரதிநிதிகள் விளக்கமளித்தனர்.

பாடசாலை மாணவர்களுக்கு மாலை நேர வகுப்பு நடத்துவதற்கு போயிட்டி வினோபாஜி சனசமூக நிலைய நிலையத்துக்கு அருகில் தற்காலிக மண்டபம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. மேலும் போயிட்டிக் கிராமத்தில் கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் விதவைகளுக்கு வாழ்வாதார உதவிகளாக ஆடு, மாடு கோழி வளர்ப்பு சுயதொழிலுக்கு வேல்ட் விஷன் நிறுவனம் நிதி வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-134)

# க.பொ.த.(உயர் தர) பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள் சில...

அச்சுவேலி மத்திய கல்லூரி

3A - சி. மேரிதர்மினி

2A,C - கு.சுபர்ணவிழி

ரா.ஜெயகங் காயினி.

A, B,C - க. பிரவீனா, ம. அபிராமி.

A, B,S - அ. கௌசிகா, இ. மயூரி

புற்றலை மகாவித்தியாலயம்

கலைப்பிரிவு

3A - இ. கிருஷ்ணப்பிரியா.




பரு.சித்தி விநாயகர் வித்தியாலய கால்கோள் விழாவில் வித்தியாலய அதிபர் அ.சா. அரியகுமார் மங்கள விளக்கேற்றுவதையும் பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன் உரையாற்றுவதையும் அருகில் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் வே.செல்வ ராசா அமர்ந்திருப்பதையும் தரம் 2 மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

புதுமையான கருத்துக்களை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள் எங்கும் இருக்கிறார்கள். புதியவைக ளைச் செய்யவேண்டும் என்ற பசி எங்கும் இருக் கிறது.

*– பெர்னாட்ஷா*

வலம்புரி

# சிறிய பாடசாலைகளை பெரிய பாடசாலைகளுடன் இணைக்கும் திட்டம் தேவை

யாழ்ப்பாண மாவட்டத்தில் 'கல்வி' ஏற்றத் தாழ்வு மிக வேகமாக வளர்ச்சி கண்டுள்ளது.

ஒரு பகுதியினர் கல்வியில் அக்கறை காட் டும்போது இன்னொரு பகுதியினர் அது பற்றி அலட்டிக் கொள்ளாமல் இருக்கின்றனர். இது மிகப் பெரும் குறைபாடாக உள்ளது.

இத்தகைய துரதிர்ஷ்டநிலை பின்தங்கிய பாடசாலைகளில் இருந்து பிறப்பெடுக்கிறது. அதாவது யாழ்ப்பாணத்தில் பிரசித்திபெற்ற பாடசாலைகளுக்கு அண்மையிலுள்ள பாட சாலைகள் கூட பின்தங்கிய நிலையில் இருக் கின்றன.

இங்கு கற்கின்ற மாணவர்கள் ஒதுக்கப்பட்ட வர்களாக இருப்பது மனவேதனைக்குரியது.

ஒரு மனித சமூகத்தில் ஒரு பகுதியினர் கல்வி கற்றவர்களாகவும் இன்னொரு பகுதியினர் கற் காதவர்களாகவும் இருப்பது மனித முன்னேற் றத்திற்கு ஏற்றதல்ல என்பதுடன் அது ஆபத் தானதுமாகும்.

எனவே யாழ்ப்பாண மாவட்டத்தில் இருக்கக் கூடிய பின்தங்கிய பாடசாலைகள் மற்றும் சிறிய பாடசாலைகள் அதாவது இருபது தொடக்கம் ஐம்பது அறுபது பிள்ளைகள் கற்கும் பாட சாலைகள் தொடர்பில் உரிய கவனம் எடுப்பது கட்டாயமானதாகும்.

தற்போது வடக்கு மாகாண அமைச்சின் உயர் அதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருக்கும் சந்தர்ப்பத்தில் சிறிய பாடசாலை களை பெரிய பாடசாலைகளுடன் இணைக்கும் நடவடிக்கைகள் குறித்து ஆராயவேண்டும்.

இருபது பிள்ளைகள் படிப்பதற்கு ஒரு பாட சாலை என்ற நிலை வேதனைக்குரியது. இத்த கைய மாணவர்களை அருகிலுள்ள பெரிய பாடசாலைகளுடன் இணைப்பதற்கான நடவ டிக்கைகளை எடுப்பதன் மூலம் மாணவர்களி டையே ஓர் சமத்துவ நிலை ஏற்படுவதுடன், பெற்றோர்களும் விழிப்படையும் வாய்ப்பும் உருவாகும்.

இதைச் செய்யாதவிடத்து பின்தங்கிய – வளம் குன்றிய பாடசாலைகளில் கற்கும் மாண வர்கள் கல்வியில் நாட்டமற்றவர்களாக தொ டர்ந்தும் இருப்பதுடன், அவர்களின் பெற்றோர் களும் ஏனோ தானோ என்ற மனநிலைக்கு ஆளாவர்.

எனவே யாழ்.மாவட்டத்தில் சமத்துவமான கல்வியை அனைத்து மாணவர்களும் பெறுவ தற்கும், யாழ்ப்பாணம் கல்வியில் தனித்துவத் தைப் பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்க யாரேனும் விரும்புவார்களாயின் அவர்களின் முதற்பணி சிறிய பாடசாலைகளை பெரிய பாட சாலைகளுடன் இணைக்க வேண்டும்.

இந்த இணைப்பின் மூலம் மாணவர்கள் அனைவரும் வளம் நிறைந்த பாடசாலைகளில் கற்கும் வாய்ப்பு ஏற்படும்.

# பாதுகாப்பான போக்குவரத்து பாதை இன்மையால் நோயாளர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது

## ஐ.சி.ஆர்.சி. சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மோதல் இடம்பெறும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் விடுதலைப் புலிகளின் பகுதிக்கும் இடையில் பாதுகாப்பான போக்குவரத்துப் பாதையொன்று இல்லாமையால் நோயாளர் களுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச செஞ் சிலுவைச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால் ஸ்தலத்திலேயே வைத்தியம் செய்யமுடியாத வர்களை அரச கட்டுப்பாட்டு பகுதியான வவுனியாவுக்கு எடுத்து வர முடியாதிருப்பதாகவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இடம்பெற்றுவரும் மோதல்கள் காரணமாக பொதுமக்க ளுக்குத் தேவையான நிவாரணப் பொருட்கள் கடந்த 5 தினங் களாக சென்றடையவில்லையென சுட்டிக்காட்டியுள்ள செஞ் சிலுவைச் சங்கம், வன்னியிலுள்ள பொதுமக்கள் மோதல்களி னால் களைப்புற்றுள்ளதாகவும் கூறுகிறது.

தொடர்ச்சியான இடப்பெயர்வு மற்றும் தொடர்ச்சியான உடமை இழப்புக்கும் வன்னியிலுள்ளவர்கள் முகம்கொடுக் கின்ற போதிலும், அவர்களின் ஒத்துழைப்பு மிகவும் சிறந்த நிலை யில் இருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங் கைக்கான தலைவர் போல் காஸ்ரெலா தெரிவித்துள்ளார்.

முன்னரங்கு எல்லைகள் தினசரி மாறிக்கொண்டிருக்கும் நிலையில் சிறியதொரு இடத்திற்குள் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் செறிந்திருப்பதனால் அங்கு சுகாதார மற்றும் வாழ்க்கைத்தரம் குறித்த சவால்கள் தோன்றியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2002 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை யான காலப்பகுதியில் 300 மீற்றர் நீளமான பகுதியில் பயணிப் பதற்கு மட்டுமே இரு தரப்பினரிடமிருந்தும் பாதுகாப்பு உத்தர வாதம் பெறவேண்டி இருந்தபோதிலும், இப்போது 30 கிலோ மீற்றரில் பயணம் செய்யவேண்டியுள்ளதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

தற்போதைய நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, மோத லில் ஈடுபட்டுள்ளவர்களுடன் அனுமதியைப் பெற்றுக் கொள்வ தற்காக அதிகளவிலான சர்வதேச மற்றும் உள்நாட்டு ஊழியர் களை பணியில் ஈடுபடுத்தவேண்டியுள்ளதாகவும் சர்வதேச செஞ் சிலுவைச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரி வித்துள்ளது.

சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்கமைய நோயாளர்க ளையும், சுகாதார ஊழியர்களையும் எடுத்துச் செல்லும் நோயா ளர் காவு வண்டிகளின் பாதுகாப்பான போக்குவரத்தை சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கம் உறுதிப்படுத்த வேண்டியுள்ளதா கவும் போல் காஸ்ரெலா கூறியுள்ளார். (ஓ-6)

# யெகோவாவின் சாட்சிகள் மகாநாடு

யெகோவாவின் சாட்சிகள் விசேட மகா நாடு இன்று ஞாயிற் றுக்கிழமை காலை 9.40 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற வுள்ளது. இம் மகாநாட்டில் பிற்பகல் 2.55 மணிக்கு உங்கள் ஊழியத்தை உயர்வாய் மதியுங்கள் என்ற பொதுப் பேச்சு இடம்பெறவுள்ளது. (ஓ)

# எவ்வாறான உண்ணாவிரதம் இருந்தாலும் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்படமாட்டாது

## அரசாங்கம் தெரிவிப்பு

தமிழக அரசியல்வாதிகள் எவ்வாறான உண்ணாவிரதப் போராட்டங்களை முன்னெடுத்தாலும் அரசாங்கம் முல்லைத் தீவில் முன்னெடுத்துள்ள இராணுவ நடவடிக்கை களை நிறுத்தாதென திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

யுத்த நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தும் வகையில் முன்னெடுக்கப்படும் எந்தவொரு போராட்டத்திற்கும் அரசாங்கம் அடிபணி யாதென சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட் டுள்ளார்.

தமிழகத்தில் உள்ள விடுதலை சிறுத்தை கள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவள வனால் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று முன் னெடுக் கப்பட்டுள்ளது.

எனினும், இந்தப் போராட்டங்களுக்கு அஞ்சி விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் யுத்தம் நிறுத்தப்ப டாதென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

(ஓ-6)

# வாக்காளர் பட்டியல்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பிரிவுக்குரிய வாக் காளர் இடாப்புக்களில் 2008ஆம் ஆண்டில் திருத்தம் மேற் கொள்ளப்பட்டவற்றை பார்வையிட விரும்பும் பொதுமக்கள், வாக்காளர் பட்டியலில் நீக்கப்படும் பெயர்களை ஏ நிரலிலும்,

புதிதாக சேர்க்கப்பட்ட பெயர்களை பி நிரலிலும் அலுவலக நேரத்தில் பார்வையிட முடியுமென வலி.தென்மேற்கு பிரதேச சபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

(ந-14)

# கண்பார்வையற்றவர்களுக்கான ஆக்கத்திறன் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலுள்ள விழிப்புலன் அற்றவர்களுக்கான தேசிய செயலகம் கண்பார்வை யற்றவர்களுக்கான கவிதை, சிறுகதை, சஞ்சிகை ஆக்கம் எனும் விடயங்களில் ஆக்கத் திறன் போட்டியை நடத்தவுள்ளது. இதற்குரிய ஆக்கங்களை பிறைல் எழுத்துக்கள் மூல மும், சாதாரண எழுத்துக்கள் மூலம் அனுப்பி வைக்க முடியும்.

இதற்கான முடிவுத்திகதி 2009.05.31 ஆகும். மேலதிக விபரங்களை சமூகசேவை உத்தியோகத்தர் வலி.கிழக்கு கோப்பாய் அல்லது மாவட்ட சமூகசேவை உத்தியோ கத்தர் பிராந்திய அலுவலகம், காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி (தொலைபேசி (இல. 060 221 1256) ஆகிய வற்றுடன் தொடர்பு கொள்ளுமாறும் பெறுமதி மிக்க பணப் பரிசில்கள், சான்றிதழ்கள் போட்டி வெற்றி யாளர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக வும் கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன ராஸ் அறிவித்துள்ளார்.

(ஓ)

# குழந்தையும் தெய்வமும்


இன்று நம் ஆண்டவரின் திருக்காட்சி விழாவைக் கொண் டாடுகின்றோம். அதாவது, குழந்தை வடிவில் தெய்வத்தின் வெளிப்பாடு குழந்தை உருவில் நம்மைத் தேடிவந்த தெய்வம். இந்தக் குழந்தை தெய்வீகக் குழந்தை என்பதால் அதிசய விண் மீன் வானிலே தோன்ற அதைப் பார்த்து புரிந்து கொண்ட 3 கீழ்த்திசை ஞானிகள் கஸ்பார், மெல்கியோர், பல்தசார் அதிசய விண்மீனைப் பின் தொடர்ந்து சென்றனர்.

## பரமபிதா காட்டிய பாதை

அது மறைந்த இடத்தில் பார்த்தால் குரூர குணம் கொண்ட ஏரோது அரசனைக் கண்டார்கள். அந்த விண்மீன் இறுதியாக நின்ற இடத்தில் பார்த்தால் குழந்தை உருவில் தெய்வத்தைக் கண்டார்கள் ; வணங்கினார்கள், தங்கள் காணிக்கைகளை செலுத்தினார்கள்.

குழந்தையின் உருவில் நாமும் தெய்வத்தைக் காண வேண்டும். கண்டபின் அவருக்கு நம் வணக்கத்தையும், காணிக்கைகளையும் செலுத்த வேண்டும். அதற்கு இன்று பல் வேறு அடையாளங்களை விண்மீனைப் போன்று இறைவன் அனுப்பிக் கொண்டே இருக்கின்றார். அவைகளையும் புரிந்து கொண்டு அந்தக் குழந்தை வடிவில் இறை வெளிப்பாட்டைப் புரிந்து கொள்ள வேண்டும். தெய்வம் என்றால் அவர் தம்மை வெளிப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

அடுத்து, தெய்வத்தைக் கண்டபின் அந்த மூன்று ஞானி களும் வேறு பாதையில் சென்றது போல், இன்று நாமும் அதே இயேசு தெய்வத்தை ஒவ்வொரு நாளும் திருப்பலியில் கண்ட பிறகு நமது வாழ்க்கைப் பாதையையும் புதிய பாதை யாக மாற்ற வேண்டும். அப்போதுதான் அவ்வெளிப்பாட் டிற்கும் வழிபாட்டிற்கும் அர்த்தம் பிறக்கும்.



இன்று இயேசு தெய்வம் யார் வழியாக தம்மை வெளிப் படுத்துகின்றார் என்று புரிந்து கொள்ள வேண்டும். அன்று குழந்தை உருவில் தெய்வம் தம்மை வெளிபடுத்தினார். குழந்தை என்றால் இயலா மையில் இருப்பது.

அடுத்தவரை சாந்திருப் பது இன்று இயலாமையில் இருக்கின்ற இறைவனையே சார்ந்து இருக்கின்ற ஏழை கள், அனாதைகள், கைவிடப் பட்டோர், எல்லா நிலைகளி லும் சமூகத்தில் ஒடுக்கப்பட் டோர், ஒதுக்கப்பட்டோர் இவர்களில் தான் இயேசுவின் வெளிப்பாட்டைப் பார்க்க வேண்டும். இவர்களில் இயேசுவைக் காணாதவர்கள், தெய்வத்தை எப்போதும் காணமாட்டார்கள்.

தேடும் தெய்வம் நம் தெய்வம் அவர் அன்று குழந்தை வடிவில் நம்மைத் தேடிவந்து மூன்று ஞானிகளுக்குத் தம்மை வெளிப்படுத்தினார். இன்று நாமும் குழந்தைகள் இயல்பில் இருக்கின்ற அனைவரிலும் அந்தத் தெய்வத்தைக் காண் போமா? தம்மை வெளிப்படுத்தும் இறைவனை நாம் புரிந்து கொள்வோம். புரிந்து கொண்டபின் அவரை ஏற்று வணங்கி அவரை வாழ்வாக்குவோம். புதிய பாதையை அமைப்போம்.

*ஜோன் ரொபேர்ட்.*

# அரச சார்பற்ற நிறுவனங்களின் செலவுகளை கண்காணிப்பதற்கான செயற்திட்டம் தயார்

## திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் தாரா தெரிவிப்பு

(கொழும்பு)

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களால் இலங்கையில் செய்யப்படும் செலவுகளைக் கண்காணிப்பதற்கான செயற்திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக திட்ட அமுலாக்கல் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார்.

இந்தச் செயற்திட்டத்துக்கமைய தமது செலவு விபரங்களை பாதுகாப்பு அமைச்சு, சமூக சேவைகள் அமைச்சு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகம் போன்றவற்றிற்கு வழங்க வேண்டும் எனவும், இணைந்து செயற்பட மறுக்கும் அரசார்பற்ற நிறுவனங்களின் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடைய விசா அனுமதிகள் இரத்துச் செய்யப்படும் எனவும் திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் தாரா எஸ். விஜயதிலக கூறினார்.

"நாட்டின் அபிவிருத்தித் திட்டத்தில் எவ்வாறு அரசசார்பற்ற நிறுவனங்கள் பங்களிக்கின்றன என்பதை அறிவதே எமது முக்கிய குறிக்கோள். இலங்கை அரசாங்கத்தால் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என அடையாளம் காணப்பட்ட பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றனவா என்பதை கண்காணிக்கவுள்ளோம், என்றார் அவர்.

இந்தப் புதிய நடைமுறை தொடர்பாக சமூக சேவைகள் அமைச்சின் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்தில் பதிவு செய்திருக்கும் ஆயிரத்து 278 அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் இலங்கையில் முன்னெடுத்திருக்கும் செயற் திட்டங்கள், அறிக்கைகள் மற்றும் பணியாளர்களின் விபரங்கள் போன்றன கோரப்படும் எனவும் தாரா தெரிவித்துள்ளார்.

இந்த விபரங்கள் அடங்கிய இணையத்தள மொன்றை அனைத்து அரசசார்பற்ற நிறுவனங்களும் ஆரம்பிக்க வேண்டும் எனப் பணிப்புரை வழங்கப்படும் எனக் குறிப்பிட்ட அவர், திட்டமிடல் அமைச்சால் வழங்கப்படும் இரகசியக் குறியீடுகளையே அவ் அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது இணையத்தளங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் எனவும் கூறினார்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தளங்கள் பிந்திய தகவல்களுடன் மாற்றங்கள் செய்யப்படவேண்டும் எனவும், அவை அமைச்சினால் கண்காணிக்கப்படும் எனவும் திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ஓ-6)

## உணவு நிலையங்களுக்கான 2009 ஆம் ஆண்டுக்கான அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட சகல உணவு கையாளும் நிலையங்களும் 2009 ஆம் ஆண்டுக்கான அனுமதி பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பத்தினை இம் மாதம் 31ஆம்திகதிக்கு முன் சமர்ப்பித்து உரிமத்தை பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## சர்வதேச லயன்ஸ் கழகங்களின் சமாசத்தின் முன்னாள் தலைவரின் வருகை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் சமாசத்தின் முன்னாள் தலைவர் லயன் மகேந்திர அமரசூரிய MJF நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

அவர் மு.ப 10.30 மணிக்கு யாழ் பஸ் நிலையத்திலிருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு சகல லயன்ஸ் கழகங்களினாலும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு மு.ப 11 மணிக்கு வைத்தியசாலையில் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் சமாசத்தின் நிதிப்பிரிவினால் LCIF நிதியளிக்கப்பட்ட அதி தீவிர சிகிச்சைப் பிரிவை திறந்து வைக்கவுள்ளார்.

பி.ப 2.50 மணிக்கு அல்வாய் வடமேற்கு (திக்கம்) சுனாமி வீடமைப்புத்திட்டத்தை வைபவ ரீதியாக திறந்து வைப்பார். தொடர்ந்து பி. ப 3 மணிக்கு அல்வாய் வடமத்தி சுனாமி வீடமைப் புத்திட்டத்தையும் 3.30 கெருடாவில் கொலனி சுனாமி வீடமைப்புத்திட்டத்தையும் 3.40 க்கு கெருடாவில் மண்டபக்காடு சுனாமி வீடமைப் புத் திட்டத்தையும் திறந்து வைப்பார்.

அத்துடன் தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயத்தில் இடம் பெறும் பொதுக் கூட்டத்திலும் பங்குபற்றவுள்ளார். (ஓ)

# இலங்கையில் நல்லாட்சியை ஏற்படுத்த உலக வங்கி உதவி வழங்குகிறது

(கொழும்பு)

இலங்கையில் நல்லாட்சியை ஏற்படுத்தும் நோக்கில் உலக வங்கி பல்வேறு உதவிகளை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொது முயற்சியாண்மை குறித்த பாராளுமன்றத் தெரிவுக்குழு மற்றும் பொது கணக்காய்வு குறித்தபாராளுமன்றத் தெரிவுக்குழு ஆகியவற்றை நெறிப்படுத்தும் நோக்கில் உலக வங்கி உதவிகளை வழங்கியுள்ளது. குறித்த இரண்டு குழுக்களையும் சீரமைக்கும் நோக்கில் சுமார் 4 இலட்சத்து 94ஆயிரம் அமெரிக்க டொலர்களை உலக வங்கி வழங்கியுள்ளது. மேலும் குறித்த குழுக்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்க இந்தியாவின் உதவியைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் பாராளுமன்றத் தெரிவுக் குழுக்களின் தலைமைப் பொறுப்பு ஆளும் கட்சியினரே வகிப்பதனால் அதன் நியாயத் தன்மை கேள்விக்குறியாக அமைந்துள்ள தென எதிர்க் கட்சிகள் குற்றம் சுமத்தியுள் ளன. (ஓ-6)

# புதிய துறையில் பட்டம் பெறுவோருக்கான வேலை வாய்ப்புக்கள் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)


யாழ். பல்கலைக்கழகத்தில் புதிய பாடத் துறைகளில் பட்டம் பெற்று வெளியேறும் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புகள் குறித்து வடக்கு மாகாண சபை உயர் அதிகாரிகளுடன் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தலைமையிலான பல்கலைக்கழக குழுவினர் விஷேட சந்திப்பொன்றை நடத்தினார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று முன் தினம் பிற்பகல்3 மணிக்கு இடம் பெற்ற இச் சந்திப்பில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரப்பிள்ளை, விரிவுரையாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாண சபை உயர் அதிகாரிகளான பிரதம செயலாளர் எஸ். ரங்கராஜா கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் ஆகியோரும் பங்கேற்றனர்.

அத்துடன் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகிய தனியார் பாடசாலை அதிபர்களும் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதில் யாழ். பல்கலைக்கழகத்தில் சமூகவியல், உளவியல், மனைப்பொருளியல், சமுதாய பிராந்திய திட்டமிடல், ஆங்கில மொழி கற்பித்தல், விளையாட்டு விஞ்ஞானம் ஆகிய துறைகளில் பட்டம் அல்லது டிப்ளோமா பெற்று வெளியேறுவோரிற்கு வேலை வாய்ப்பளிப்பதற்கான சந்தர்ப்பங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. (ச-5)



கோப்பாய் உதவிப் பங்குத்தந்தையாகப் பணியாற்றிய அருட்பணி பே.பெனிக் னஸ்(அ.ம.தி) அடிகளாரின் பணி நயப்பு விழாவின் போது கோப்பாய் தெற்கு றோ.க.த.க பாடசாலை மாணவரொருவர் அடிகளாரைக் கௌரவிப்பதையும் அதிபர் ச.லலீசன் நினை வுப்பத்திரம் வழங்குவதையும் அருகில் றோமன் கத்தோலிக்க பாடத்திற்கான ஆசிரிய ஆலோ சகர் அன்ரனி பீற்றர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை திங்கட் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் பாடசாலை அதிபர் திருமதி சாந்தினி வாகீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழவில் பிரதம விருந்தினராக யாழ். தேசியக் கல்வியியற்கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், சிறப்பு விருந்தினராக கச்சேரி நிக்கொட் பிரதி திட்டப்பணிப்பாளர் என். எஸ். ஆர். சிவரூபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

# புலிகளால் காப்பாற்றப்பட்ட படைவீரரும் இலங்கை அரசின் தடையால் பாதிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முரசுமோட்டை பகுதியில் இந்த மாதத்தின் தொடக்கத்தில் நடைபெற்ற மோதலின் போது தமிழீழ விடுதலைப்புலிகளால் காயங்களுடன் மீட்கப்பட்ட இலங்கை படைத்தரப்பைச் சேர்ந்தவருக்கு மேலதிக மருத்துவ உதவிகள் தேவைப்படுவதாக கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முரசுமோட்டை பகுதியில் இம்மாதம் நான்கரம் திகதி நடைபெற்ற மோதலின் போது காயங்களுடன் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர் விடுதலைப்புலிகளினால் காப்பாற்றப் பட்டிருந்தார்.

வெலிமட அம்பகாவத்தை பகுதியை சேர்ந்த லயன்ஸ் கோப்ரல் எச்.எம்.சமன் புஷ்பகுமார என்பவரே விடுதலைப் புலிகளால் காப்பாற்றப்பட்டவர் ஆவார்.

நெற்றியில் காயமடைந்த புஷ்பகுமாராவுக்கு நரம்பியல் அறுவை சிகிச்சை தேவைப் படுவதாகவும் அதற்கான உதவிகளை மேற் கொள்ளுமாறும் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காயமடைந்த படைத்தரப்பைச் சேர்ந்தவர் மிகவும் மெதுவாக உரையாடுகின்ற போதும் அவரால் உதவிகள் இன்றி எதனையும் செய்ய முடியாதுள்ளதாக அவர் தனது வேண்டுகோளில் மேலும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது அனைத்துலகத்தின் மனிதாபிமான விதிகளுக்கு புறம்பாக இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் மீதான தடை காரணமாக தமிழ் மக்கள் மட்டுமல்லாது காயமடைந்து விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டுள்ள படையினரும் பாதிப்படைந்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## தியாகராஜா சுவாமிகளின் 162ஆவது ஆராதனை விழா

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நடாத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜா சுவாமிகளின் 162 ஆவது ஆராதனை விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 3. 30 மணி வரை மன்றக் கலாமண்டபத்தில் க.சோமசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சற்குரு தியாகராஜா சுவாமிக்குப் பூசையும் வழிபாடும், ஈழத்து முது பெருங்கலைஞர்களும் இளங்கலைஞர்களும் இணைந்து வழங்கும் பஞ்சரத்தினக் கீர்த்தனை ஆராதனையும், நாதஸ்வர வித்துவான்களும், தவில்வித்து வான்களும் இணைந்து வழங்கும் நாதாஞ்சலியும், ஈழத்தின் இசை விற்பன்னர்கள் பக்கவாத்திய சகிதம் வழங்கும் இசை அர்ச்சனையும் இடம் பெறவுள்ளது. (ஓ-4)

# டெஸ்ட் அரங்கில் நம்பர்-1 அணி எது?










கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட்டில் ஆதிக்கம் செலுத்திவந்த அவுஸ்திரேலிய அணியின் அரசாட்சி விரைவில் முடிபுக்கு வரவிருக்கிறது.

இதற்கு இந்தியா தான் முதலில் விதை விதைத்தது. இப்போது அதை தென்னாபிரிக்காவும் சேர்ந்து அறுவடை செய்ய ஆம்பித்திருக்கிறது. விளைவு, மகுடம் யாருக்கு என்பதில் பலத்த போட்டி காணப்படுகிறது. இருப்பினும் இந்த ஓட்டப்பந்தயத்தில் இந்தியாதான் முதலிடத்தில் இருக்கிறது என்பது மறுக்க முடி யாத உண்மை.

**புரியவில்லை**

அவுஸ்திரேலிய அணியினர் அடுத்தடுத்து தோல்வியை சந்தித்து வருகிறார்கள். ஆனால் இன்னும் அவர்கள் தான் நம்பர்-1 என தரவரிசை சொல்கிறது. தற்போதைய நிலைமையை பார்த்தால் மிகவும் பரிதாபமாக உள்ளது.

**வீழ்ச்சிக்குக் காரணம்**

வோர்ன், மெக்ராத்துடன் சேர்ந்து ஹஸ் பரோவிச், கில்லஸ்பி, மக்கில், லாங்கர் போன்ற திறமையான வீரர்கள் போனபின்பு அவுஸ்திரேலியா தற்போது வீரர்களை சோதனை செய்துபார்த்துக்கொண்டு உள்ளது. அதிலும் தற்போது ஹைடனும் ஓய்வு பெற்றுள்ளார்.

ஒரே இரவில் வோர்னும். மெக்ராத்தும் உருவாகிவிட முடியாது அதற்கு சிலகாலம் பிடிக்கும்.

இதுகுறித்து பொன்டிங் கூறுகையில்; நாங்கள் தற்போது சோதனையிலிருக்கிறோம். ஆனால் கடும் போட்டியைதரும் அணியாகத்தான் இன்னும் இருக்கிறது என்றார்.

**பந்துவீச்சில் சோகம்**

சுழற்பந்தில் இப்போது அவுஸ்திரேலிய அணி சோதனைக்கட்டத்திலிருந்தாலும் அது மிகவும் மோசமான நிலையில்தான் இருக்கிறது. இந்தப்பிரிவில் அவுஸ்திரேலிய அணியின் ஆதிக்கம் கிட்டத்தட்ட இறந்தே விட்டது எனலாம். சுழற்பந்துவீச்சாளர்களை மாற்றி மாற்றி சோதித்தாலும் தோல்விதான் கிடைக்கிறது.

**ஆர்.யூ.பாலமுருகன்**

**இந்திய அணி எழுச்சி**

அதே நேரத்தில் இந்திய அணி பல்வேறு நாடுகளுக்கு எதிராக தொடரை வென்று வருகிறது. இந்திய அணி கடந்த ஆண்டு உள்ளூரில் 100 சதவீத வெற்றியும் வெளிநாடுகளில் 58 சதவீத வெற்றியும் பெற்றுள்ளது. அவுஸ்திரேலிய முத்தரப்பு தொடரை வெல்வது எவ்வளவு கடினம் என்பதை பார்க்க வேண்டும் ஆனால் அதை இந்தியா சாதித்தது.

**போட்டியில் தென்னாபிரிக்கா**

தென்னாபிரிக்க அணி வெளிநாடுகளிலும் அதிக வெற்றிகளை குவித்துவருவதை கவனத்தில் கொள்ளவேண்டும் சமீபத்திய அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரை 2:1 என வென்று கடந்த பத்து தொடர்களில் தோல்வியே சந்திக்காமல் உலாவருகிறது. இது தொடரும் பட்சத்தில் அவுஸ்திரேலியாவை தமது மண்ணில் தென்னாபிரிக்க அணி வீழ்த்தினால் நம்பர்-1 அணியாக முடிபாகிவிடும்.

**வேகத்தின் விஸ்வரூபம்**

இந்திய அணியும் வெளிநாடுகளில் கடும் போட்டியை கொடுத்துவந்துள்ளது. அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் சரியான பதிலடியை வெளிப்படுத்தியது. அணியின் வேகப்பந்து வீச்சு வெளிநாடுகளில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. இந்தியாவின் சகீர்கான், இஷாந்த் சர்மா அசத்தல் போர்மை தொடரு கின்றனர்.

**முதலிடம் கிடைக்குமா?**

முதலிடத்தை பெறுவது என்பதுவெளிநாடுகளில் தொடர்ந்து இந்திய அணி பெறும் வெற்றியைப் பொறுத்துதான் இருக்கிறது. நல்ல திறமையான போட்டியாளர்களை இந்திய அணி பெற்றுவருகிறது. ஆனால் அதை தொடர்ந்து உறுதியாக வெளிப்படுத்த வேண்டும். அப்படி செய்துவிட்டால் தென்னாபிரிக்காவை இந்திய அணி முந்தி விடலாம்.

**இந்திய அணியின் பலம்**

அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்காவின் சுழற்பந்து என்ற கவசங்களில் தற்போது ஓட்டைவிழ ஆரம்பித்துள்ளது. ஆனால் இந்திய அணியின் ஹர்பஜன் சிங், அமித் மிஸ்ரா கலக்குகிறார்கள். புதிய பந்தில் அசத்தும் தென்னாபிரிக்க வேகங்கள் புதிய முறைகளில் செயற்படுவதில்லை. ஆனால் இந்தியாவின் சகீர்கான், இஷாந்த் சர்மா புதிய, பழைய பந்துகளிலும் அசத்துவார்கள். ரிவர்ஸ் ஸ்விங் செய்வதிலும் வல்லவர்கள். துடுப்பாட்டத்திலும் இளம் வீரர்கள் எழுச்சி நடை போடுகிறார்கள்.

**நியூசிலாந்தில் முடிபு**

இந்நிலையில் மார்ச் மாதம் நியூசிலாந்து செல்லும் இந்திய அணி கூடுதலாக ஒரு டெஸ்ட் போட்டி விளையாடுகின்றது. இதில் தொடரை இந்திய அணி வென்றால் முதலிடத்தைக் கைப் பெற்றலாம். ஒரு தனியார் ரி.வி நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பில் நம்பர்-1 அணியாக இந்தியா தெரிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அதன் விபரம் வறுமாறு; அணி வாக்குகள் 1. இந்தியா 62.33 சதவீதம், 2. தென்னாபிரிக்கா 29.06 சதவீதம், 3. அவுஸ்திரேலியா 8.61 சதவீதம்.

# ஆஸி. ஓபன் எனக்குத் தான்!



கடந்த சில ஆண்டுகளாக டென்னிஸ் உலகில் ரஷ்ய வீராங்கனைகள் கொடிகட்டி பறக்கின்றனர். ஷரபோவா, கஸ்னெட் சோவா, டெமன்டிவா, சபினா, ஜுவனாீவா என முதல் பத்தில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

இவர்களில் சபினாவுக்கு கடந்தாண்டு சிறப்பாக அமைந்தது. பிரஞ்ச் ஓபன் தொடரில் இறுதிப்போட்டிவரை முன்னேறி அசத்தினார்.

ஆண்டின் முடிபில் தரவரிசையில் மூன்றாவது இடத்தை பிடித்து எழுச்சி கண்டார். 2009இல் ஆரம்பத்திலிருந்தே சிறப்பாக விளையாடுவேன். அவுஸ்திரேலியன் ஓபன் தொடரில் பட்டம் வெல்வேன். தொடர்ந்து திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்தி நம்பர்-1 இடத்தை கைப்பற்றுவேன் என 22 வயதான சபினா உற்சாகமாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஊடகமென்றுக்கு அளித்த போட்டியில்;

❀ கடந்தாண்டில் உங்களுக்கு அதிக மகிழ்ச்சி அளித்த தருணம் எது?

என் வாழ்க்கையின் சிறந்த ஆண்டு என்றால் அது 2008தான். பிரெஞ்சு ஓபனில் இறுதிப்போட்டி வரை முன்னேறியது மகிழ்ச்சியானது.

பீஜிங் ஒலிம்பிக் பெண்கள் ஒற்றையரில் வெள்ளி வென்றது மறக்க முடியாத விடயம். தொடர்ந்து சிறப்பாக விளையாடியதை அடுத்து தரவரிசையில் நல்ல முன்னேற்றம் கண்டது உற்சாகம் அளிக்கிறது.

❀ உங்கள் சகோதரர் மாரட் சபினுடன் ஹாப்மேன் தொடரில் விளையாடப் போவது பற்றி சொல்லுங்களேன்?

விளையாட்டிலும் சரி அனுபவத்திலும் சரி சபின் என்னைவிட சிறந்தவர். அவருடன் இணைந்து விளையாட வேண்டும் என்பது எனது கனவுகளில் ஒன்று. விரைவில் போர்த்தில் நடக்கவிருக்கும் ஹோப்மேன் தொடரில் அவருடன் ரஷ்ய அணிக்காக கலப்பு இரட்டையரில் பங்கேற்க இருக்கிறேன். இத் தொடரை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருக்கிறேன்.

❀ மற்ற விளையாட்டுகளை விட டென்னிஸ் உங்களை எப்படி கவர்ந்தது. உங்கள் லட்சியம் என்ன?

சிறு வயதிலிருந்தே எனது சகோதரர் சபினின் ஆட்டத்தை பார்த்து வளர்ந்ததால் டென்னிஸில் ஈடுபாடு அதிகரித்திருக்கலாம். மற்றபடி விசேடமான காரணம் எதுவுமில்லை. டென்னிஸ் உலகில் நிறைய சாதிக்க வேண்டும் என ஆசைப்படுகிறேன். அனைத்து கிராண்ட்ஸ்லாம் பட்டங்களையும் வெல்வது, நம்பர்-1 இடத்தை பிடிப்பது என அடுக்கி கொண்டே போகலாம்.

தற்போதைக்கு அவுஸ்திரேலியன் ஓபன் தொடரை வெல்ல முயற்சித்து வருகிறேன். இது நடந்தால் நம்பர்-1 கனவை நோக்கி விரைவாக முன்னேற முடியும்.

❀ நம்பர்-1 இடத்தைப் பிடிக்க என்ன திட்டம் வைத்துள்ளீர்கள்?

ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் உடற்தகுதி என்பது மிகவும் அவசியம். எப்போதும் உடற்தகுதிக்குத்தான் முன்னுரிமை கொடுப்பேன். இதற்கு தேவையான பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறேன். அனைத்து தொடர்களிலும் பங்கேற்க போவதில்லை. ஆனால் முக்கிய தொடர் ஒன்றில் கூட அடுத்தவர்களுக்கு கோப்பையை விட்டுக்கொடுக்க மாட்டேன்.

❀ போட்டியின் போது அதிகம் ஆக்ரோஷம் காட்டுவீர்கள். இந்தாண்டும் ஆக்ரோஷம் தொடருமா?

போட்டிகளின் போது டென்னிஸ் ரக்கெட்டை உடைப்பது சபினின் பழக்கம். அது என்னையும் தொற்றி கொண்டுவிட்டது. கடந்தாண்டு எங்கள் இருவருக்குள் யார் அதிகம் உடைத்தார்கள் என்ற போட்டியே நடந்தது என்று சொல்லலாம். எளிதில் உணர்ச்சிவசப் பட்டுவிடுவதால் இது போன்ற பிரச்சினைகள் எழுகிறது. இனி இது போல் நடக்காது என்றார்.

# இலங்கை அணி வீரர்கள் இப்படியான சாதனையும் படைக்கிறார்கள்

இலங்கை-பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் மிர்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற முக்கோணத் தொடரின் இறுதிப் போட்டியில் இலங்கை அணி வீரர்கள் இவ்வாறும் சாதனை படைத்துள்ளனர்,

இலங்கை அணி நேற்று முன்தினம் முதல் 5 விக்கெட்டுக்களையும் வெறும் 6 ஓட்டங்களுக்கு பறிகொடுத்தது. இதன் மூலம் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் முதல் 5 விக்கெட்டுக்களையும் குறைந்த ஓட்டங்களுக்கு பறிகொடுத்த அணியாக இலங்கை சாதனை படைத்தது.

இதற்கு முன்னர் 1993ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணி மேற் இந்திய தீவுகளுக்கு எதிரான போட்டியில் முதல் 5 விக்கெட்டுக்களையும் 12 ஓட்டங்களுக்கு பறிகொடுத்ததும்.

2003 ஆம் ஆண்டு கனடா அணி இலங்கைக்கு எதிரான போட்டியில் முதல் 5 விக்கெட்டுக்களையும் 12 ஓட்டங்களுக்கு பறிகொடுத்துமே சாதனையாக இருந்தது.

நேற்றைய தினம் முரளி பெற்ற 33 ஓட்டங்களானது ஒருநாள் அரங்கில் அவர் பெறும் அதிகபட்ச ஓட்டங்களாகும். இதற்கு முன்னர் 2006ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 27 ஓட்டங் களை பெற்றதே அதிக பட்சமாக இருந்தது.

இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன நேற்று முன்தினத்திலும் சோபிக்கத் தவறினார். 2 பந்துகளுக்கு முகம் கொடுத்த அவர் மீண்டும் பூச்சியத்தில் அரங்கு திரும்பினார்.

மஹேலஜெயவர்த்தனா கடைசியாக விளையாடிய 5 ஒருநாள் இன்னிங்ஸ்களில் 4 முறை பூச்சியத்தில் வெளியேறினார்.

அத்துடன் அவர் கடைசியாக விளையாடிய 9 ஒருநாள் இன்னிங்ஸ்களில் அரைச் சதம் ஒன்றைக் கூட பெறவில்லை. இதுமட்டுமல்லாது அவர்கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக ஒருநாள் சதம் ஒன்றை பெறத்தவித்து வருகிறார்.

கடந்த 2007ஆம் ஆண்டு சென்னையில் நடத்த ஆபிரிக்க பதினொருவர் அணிக்கு எதிராக ஆசிய அணிக்காக பெற்ற 107 ஓட்டங்களுமே அவர் கடைசியாக ஒருநாள் அரங்கில் பெற்றசதமாகும்.

அதேபோன்று மஹேல ஜெயவர்த்தன நேற்றைய தினத்திலும் டக் அவுட் ஆனதன் மூலம் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் அதிக முறை பூச்சியத்தில் வெளியேறிய வீரர்கள் வரிசையில் முரளிதரனுடன் 5ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டார்.

இருவரும் இதுவரை 23 முறை பூச்சியத்தில் வெளியேறியுள்ளனர். இதில் விசேட அம்சம் என்னவென்றால் ஒருநாள் அரங்கில் அதிக முறை டக் அவுட் ஆன வீரர்கள் வரிசையில் முதல் 5 இடங்களுள் 4 இலங்கை வீரர்கள் காணப்படுகின்றனர்.

இதன் முதலிடத்தில் ஜெயசூரிய (32) காணப்படுவதோடு மூன்று மற்றும் நான்காவது இடங்களை முறையே சமிந்த வாஸ் (24) மற்றும் ரொமேஷ் களுவிதாரண (23) ஆகியயோர் பிடித்துள்ளனர்.

இலங்கை அணியின் கௌரவத்தை காத்த குமார் சங்கக்கார நேற்றுமுன்தினம் 37 ஓட்டங்களை பெற்றபோது ஒருநாள் அரங்கில் 7 ஆயிரம் ஓட்டங்களை அடைந்தார். இதன்படி ஒருநாள் போட்டிகளில் 7 ஆயிரம் ஓட்டங்களை தாண்டும் 27ஆவது வீரராகவும் 6ஆவது இலங்கையராகவும் சங்கக்கார பதிவானார்.

## ஏமாற்றம் தரும் சிவ்சங்...

முடியாக இருக்க வேண்டும் என்றும் ராம தாஸ் வலியுறுத்திக் கூறினார்

இலங்கையில் யுத்தநிறுத்தம் ஏற்பட இந் தியப் பேரரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி விடுதலைச் சிறுத்தை கள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் நேற்றுச் சனிக்கிழமை மூன்றாவது நாளாக உண்ணா விரதம் இருந்து வருகிறார்.

அவர் உண்ணாவிரதம் இருந்துவரும் மறைமலை நகருக்கு நேரில் சென்று அவரை சந்தித்த ராமதாஸ், அவரது உடல் நலம் கருதி உண்ணாவிரதத்தை கைவிடும்படி கேட்டுக் கொண்டார்.

பின்னர் அங்கு பேசிய டாக்டர் ராமதாஸ், வெளியுறவுத்துறை செயலாளர் சிவ்சங் கர் மேனன் கொழும்பில் அந்நாட்டு வெளியு றவுத்துறை அமைச்சரை சந்தித்து என்ன பேசினர் என்பது குறித்து அந்நாட்டின் வெளி யுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கை இந்து நாளேட்டில் வெளிவந்திருப் பதை சுட்டிக்காட்டிப் பேசினார்.

இலங்கையுடனான இந்திய உறவு இது வரையில் இல்லாத அளவிற்கு ஆழமாகவும் உறுதியாகவும் மாறியிருக்கிறது என்றும் மிக வும் இக்கட்டான காலங்களில்தான் நட்பின் உண்மையான தன்மை வெளிப்படும் என் றும் அதற்கு சிறந்த உதாரணமாக இலங் கை- இந்திய உறவு திகழ்கிறது என்றும் சிவ் சங்கர் மேனன் தெரிவித்ததாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கின்றது என்று இந்து நாளேட்டில் செய்தி வெளிவந்திருக்கிறது.

இலங்கையுடனான நட்பு ஆழமாகவும் உறுதியாகவும் இப்போது மாறியிருக்கிறது என்று சிவ்சங்கர் மேனன் கூறியிருப்பதை வாக்கு மூலம் என்றே எடுத்துக்கொள்ள வேண் டும்.

இந்தியா என்ன செய்து கொண்டு இருக்கி றது என்பதை சிவ்சங்கர் மேனனின் இந்த அறிவிப்பு புலப்படுத்துகின்றது என்று குறிப்பிட்ட டாக்டர் ராமதாஸ் இவரது பயணத்தை தான் முக்கியமான நிகழ்வு என்று முதலமைச்சர் கூறியிருக்கிறார் என்று சுட்டிக்காட்டினார்.

நம்புவோம், காத்திருப்போம் என்றும் முத லமைச்சர் குறிப்பிட்டு இருக்கிறார் என்றும் கூறிய டாக்டர் ராமதாஸ் இதற்கு மேலும் நாம் எப்படி நம்ப முடியும், காத்திருக்க முடியும் என்றும் வினா எழுப்பினார்.

அனைத்துக்கட்சி கூட்டங்கள் மற்றும் சட்டப்பேரவையில் தீர்மானங்களை நிறை வேற்றி இருக்கிறோம்.கடந்த டிசம்பர் மாதம் 4ஆம் திகதி அனைத்துக்கட்சி தலைவர்கள் டில்லிக்கு சென்று முறையிட்டிருக்கிறோம்.

ஆனால் எதுவும் நடக்கவில்லை. அங்கே யுத்தம் நிறுத்தப்படவில்லை வெட்கத்தாலும் வேதனையாலும் தலைகுனிந்து நிற்கிறோம் என்றும் கூறிய டாக்டர் ராமதாஸ் இலங்கை தமிழர்களின் நலனைக் காக்க முதலமைச்சர் கலைஞர் பல்வேறு காலகட்டங்களில் பாடு பட்டு இருக்கிறார் என்றும் இப்போதும் அவர் களை பாதுகாக்க அவரைத்தான் அவர்க ளும் இங்குள்ள தமிழர்களும் நம்பியிருக்கின் றோம் என்றும் குறிப்பிட்டார்.

நம்மிடையே அரசியல் கருத்து வேறுபாடு களும் கூட்டணி வேறுபாடுகளும் இருந்தா லும் அவற்றையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு ஒன்றுபட்டு கலந்தாய்வு நடத்தி முடி வெடுப்போம் என்று அவர் கம்யூனிஸ் கட் சிக்கு அழைப்பு விடுத்தார்.

நல்ல முடிவெடுப்போம். அந்த முடிவு நாட் டையே உலுக்கும் முடியாக இருக்க வேண் டும். முடிவெடுத்து முதல்வரை செயற்பட வைப்போம் என்று வலியுறுத்தினார் டாக்டர் ராமதாஸ்.

மேலும் திருமாவளவனின் உடல் நிலை குறித்து உண்ணாவிரதத்தை கைவிடுமாறு ராமதாஸ் கோரிக்கை விடுத்தார்.

(ந-5)

# சபரிமலைக்குச் சென்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 20 பேர் கேரளப் பொலிஸாரால் கைது

(சென்னை)

சபரிமலை ஐயப்பன் கோயிலில் வழி படச்சென்ற இலங்கைத் தமிழ் பக்தர்கள்20 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் உரிய ஆவணங்கள் இல் லையென்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட அவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் கள்.

இலங்கையில் இருந்து 28பேர் கொண்ட குழுவாக அவர்கள் விமானம் மூலம் ஓரிரு நாட்களுக்கு முன் சென்னை சென்றுள்ள னர். பின்னர் அவர்கள் திருச்சியிலுள்ள ஆச்சிரமத்திற்கு சென்றனர். அங்கிருந்து சப ரிமலை வந்தனர்.

இந்தக் குழுவில் 8பேரிடம் மட்டும் பாஸ் போட் உள்ளிட்ட ஆவணங்கள் உள்ளன. ஏனைய 20 பேரிடம் ஆவணங்கள் இல்லாத தால் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்றிரவு அவர்கள் சபரிமலையில் தரிச னம் முடித்துவிட்டு திரும்பிக்கொண்டிருந்த போது கேரளப் பொலிஸார் அவர்களை கைது செய்தனர்.

அவர்கள் 20 பேரும் தங்களது ஆவணங் கள் அனைத்தும் திருச்சி ஆச்சிரமத்தில் வைத்துவிட்டு வந்ததாக தெரிவித்துள்ள னர்.

இதையடுத்து கேரளப் பொலிஸார் தமி ழகப் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்துள் ளனர்.

(ந-5)

## புதுக்குடியிரு...

மோதல்களின் பின்பு புலிகளின் 19 சடலங் களையும் இராணுவத் தளபாடங்களையும் தாங்கள் கைப்பற்றியிருப்பதாகவும் இராணு வத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இம்மோதல்கள் குறித்து புலிகள் தரப்புத் தகவல்கள் வெளியிடப்படாத போதிலும் தரும புரம் பகுதியில் கடந்த வியாழன் நள்ளிரவு, வெள்ளிக்கிழமை பிற்பகல் இராணுவத்தின ரை எதிர்த்து புலிகள் நடத்திய முறியடிப்புத் தாக்குதலில் 51 படையினர் கொல்லப்பட்ட தாக பி.பி.சி. தமிழோசை செய்திவெளியிட் டுள்ளது.

(ந-5)

## என்னைக் கொல்வதற்கான சூழல்...

செய்வதற்கு சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படு கின்றன. அதற்காக என் மீது புலி முத்திரை குத்தப்பட்டுள்ளதுடன் எனது தனிப்பட்ட வாழ்க் கை தொடர்பில் பொய்ப்பிரசாரங்களும் முன் னெடுக்கப்படுகின்றன.

கொழும்பு ஹொஸ்மீட் பிளேஸிலுள்ள அலுவலகத்தில் இடம்பெற்ற சிறிலங்கா சுதந் திரக் கட்சி மக்கள் பிரிவின் ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது,

எம்.ரி.வி. நிறுவனம் மீதான தாக்குதல், லசந்த விக்கிரமதுங்க கொலை போன்ற சம் பவங்களில் வெளிநாட்டு சதித்திட்டம் பின்னணி யே உள்ளதென அரசாங்கம் குற்றஞ்சாட்டுகி றது.

இக்குற்றச்சாட்டு உண்மைதான். ஏனெ னில் எமது நாட்டிலுள்ள சில அமெரிக்கப் பிர ஜைகளும் அமெரிக்க கிறீன் காட் வைத்திருப் பவர்களுமே நாட்டின் ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைத்துக் கொண்டுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் லசந்த விக்கிரமதுங்கவிடம் ஆதாரங்கள், சாட் சியங்கள் இருந்தன. இவற்றை இங்குள்ள அமெரிக்கப் பிரஜைகளே மேற்கொண்டனர். இதனைப் பத்திரிகையில் கட்டுரையாக வெளி யிடத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இச்சந்தர்ப்பத்திலேயே லசந்த கொலை செய்யப்பட்டார். அமெரிக்கப் பிரஜைகளின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் தொடர் பான சாட்சியங்களையும் ஆதாரங்களையும் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி பராக் ஒபாமா எதிர்வரும் 20ஆம் திகதி பதவியேற்ற பின் கையளிப்பதற்கான ஏற்பாடுகளை மேற் கொண்டு வருகிறோம்.

இந்த விடயம் தொடர்பில் 20ஆம் திகதி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் செயலாளராக பதவியேற்கும் கிலாரி கிளின்ட னிடமும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு சந்தர்ப்பம் கேட்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உலகில் ஜனநாயகத்தை வலியுறுத்தும் அமெரிக்கா, இலங்கையில் ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் தனது பிரஜைகள் தொ டர்பில் என்ன விதமாக நடந்து கொள்கிறது எனக் கவனிப்போம்.

என்னைக் கொலை செய்வதற்கான சூழல் உருவாக்கப்பட்டு வருகிறது. அதற்காக அர சாங்கத்திற்கு வால் பிடிக்கும் சிலரைப் பயன் படுத்தி ஊடகங்கள் மூலம் புலி முத்திரை குத் தப்படுகிறது.

அதுமட்டுமல்லாது எனது தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பான பொய்யான பிரசாரங்களும் பரப்பப்பட்டு வருகின்றது. இவையெல்லாம் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகிறது.

என்னைக் கொலை செய்தபின்னர் மேற் கண்ட விடயங்களை சாட்சியங்களாக முன் வைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

எனக்கு எதிராகவுள்ள கொலை அச்சுறுத் தல் தொடர்பாக பொலிஸ்மா அதிபருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதோடு பாதுகாப் பை அதிகரிக்குமாறும் கேட்டுள்ளேன்.

இலங்கையில் உயிரோடு இருக்கும் ஒரே யொரு முன்னாள் வெளிநாட்டமைச்சர் நான் மட்டுமே என்றும் பொலிஸ் மா அதிபருக்கு கையளித்த கடிதத்தில் தெரிவித்துள்ளேன்.

பாதுகாப்பை பலப்படுத்திக் கொண்டு வீதிகளை மூடிக்கொண்டு புலிகளுக்கு எதி ராக இன்று கருத்துத் தெரிவிப்போர் கடந்த கால ஆட்சிகளில் பதவிகளை வகித்தபோதும் ஒரு வார்த்தையேனும் புலிகளுக்கு எதிராகப் பேசியதில்லை.

நாடாளுமன்ற ஹான்சாட்டை எடுத்துப் பார்த்தால் அது தெளிவாகும். ஆனால் நான் வெளிநாட்டமைச்சராக இருந்தபோது ஐரோப் பிய ஒன்றியத்தின் 25 நாடுகளில் புலிகள் இயக்கத்தை தடை செய்வதற்கான நடவடிக் கைகளை மேற்கொண்டேன். நாடாளுமன் றத்தில் உரையாற்றியுள்ளேன்.

வெண்தாமரை இயக்கத்தை ஆரம்பித்து தமிழ் மக்களை புலிகளிடமிருந்து பிரிப்பதற் கான திட்டங்களை முன்னெடுத்தேன். அன்று கொழும்பில் கைது செய்யப்பட்ட புலி சந்தேக நபர்களிடம் விசாரணை செய்தபோது மங் களவை கொலை செய்யவே கொழும்பு வந் தோம் என வாக்கு மூலம் வழங்கியிருந்தனர்.

எனவே என் மீது புலி முத்திரை குத்துவது என்னைக் கொலை செய்வதற்கே ஆகும். ஊடகத்துறைக்கு எதிராக அனைத்து நடவ டிக்கைகளும் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன என்றார் அவர்.

(ந-5)

## வன்னிப் போர் நிலைமை...

கனகசபை ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் சிவ்சங்கர் மேனன் தெரிவித் ததாவது, இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவார ணங்களை வழங்குவதற்கு இந்தியா நடவ டிக்கை எடுத்து வருகின்றது.

போர் நடவடிக்கையினால் தமிழ் மக்க ளுக்கு ஏற்படுகின்ற அழிவுகளை இந்தியா தடுத்து நிறுத்தும். உயிரிழப்புக்கள் சேதங்கள் மக்கள் இடம்பெயர்வுகள் பற்றிய விபரங்கள் எல்லாவற்றையும் இந்தியா அறிந்து வைத் திருக்கின்றது என சிவ்சங்கர் மேனன் தெரிவித் தார்.

அதேவேளை தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைக்கு நேர்மையான அரசியல் தீர் வொன்றை ஏற்படுத்துவதற்கு இந்திய அர சாங்கம் உரியநடவடிக்கைகளை கையாள வேண்டுமென்று சிவ்சங்கர்மேனனிடம் கோ ரிக்கை விடுத்ததாக கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.


வடக்கு கிழக்கில் போரினாலும் துப்பாக்கிச் சூட்டினாலும் மற்றும் ஆட்கடத்தல், காணாமல் போதல் போன்ற மனித உரிமை மீறல் நடவ டிக்கைகளினாலும் இனவிருத்தி வயதுடைய இளைஞர்கள் அரசாங்கத்தினால் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றனர் என்று சிவ்சங்கர் மேனனுக்கு சுட்டிக்காட்டியதாகவும் கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப் பினர்கள் மேலும் கூறினர்.

(ந-5)




## மரண அறிவித்தல்

### கனகரத்தினம் வேலுதாசன்



(வண்ணார்பண்ணை கிளை நூலகம்)

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத் தினம் வேலுதாசன் நேற்று (17.01.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம்- ரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும் விமலராணியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2009) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடை பெற்று முற்பகல் 11.00 மணியளவில் தகனக் கிரியைகளுக் காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத் துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஞானபண்டித வித்தியாசாலை அருகில்,
கொக்குவில் மேற்கு.

தகவல்:
விமலராணி
(மனைவி)

(2121)

## பட்டமளிப்பு DVD

24.11.2008 அன்று கொழும்பு BMICH இல் நடைபெற்ற உயர் தொழில்நுட்ப நிறுவன மாண வர்களுக்கான பட்டமளிப்பு விழாவின் DVD தொகுப்பு விற் பனைக்கு உண்டு.

STR Computer System
380,Navalar Road, Nallur,Jaffna.
(கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகில்)
T.P.- 021 4590775, Fax-021 4590775
Mobile- 0774192275, 0712056606

## REPAIRING

Computer, Monitor, UPS, Printer, Cardrige Refil, Woofer, DVD, CD Player என்பன உட னுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும்.

உங்கள் கணனிகள் அனைத்தும் உங்கள் வீடுகளுக்கோ, அலுவல கத்திற்கோ வந்து திருத்திக் கொடுக் கப்படும்.திருத்திய பின்னர் உத்தர வாதம் வழங்கப்படும்.

STR Computer System
380,Navalar Road, Nallur,Jaffna.
(கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகில்)
T.P.- 021 4590775, Fax-021 4590775
Mobile- 0774192275, 0712056606

## பயங்கரவாதம் இருக்கும்...

இந்திய வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனன் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து பேசியுள்ளார்.

சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் நடைபெற்ற இச்சந்திப்பின் போது பல்வேறு துறைகளிலே இரண்டு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் குறித்து கலந்துரையாடப்பட் டதாகவும் விடுதலைப்புலிகளுக்கு எதிராக படையினர் பெற்றுவருகின்ற வெற்றிகள் உள் ளிட்ட இலங்கை நிலைவரங்கள் குறித்து ஜனாதிபதி, சிவ்சங்கர் மேனனுக்கு விளக்கியிருப் பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின்போது இலங்கையில் நிலவுகின்ற இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர் வொன்றை காண்பதில் தனது அரசாங்கத்தினுடைய இலட்சியத்தினை மீண்டும் வலியுறுத் திய ஜனாதிபதி தற்போதுள்ள சூழ்நிலையின் தேவைக்கேற்றபடி பயங்கரவாதத்தினை முழு மையாக இராணுவ ரீதியில் தன்னுடைய அரசு கையாளும் என்று தெரிவித்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையிலும் இந்தப்பிராந்தியத்திலும் பயங்கரவாதத்தினை இல்லாமல் ஒழிக்க இலங்கை எடுத்துவருகின்ற சகல முயற்சிகளுக்கும் இந்தியாவின் முழுமையான ஆதரவி னை இந்திய வெளியுறவுச் செயலர் மீண்டும் உறுதிப்படுத்தியிருப்பதாகவும் அந்த அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வன்னியில் இருந்து வெளியேறிவருகின்ற மக்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற உதவிகள், நிவாரணங்கள் குறித்தும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்திய வெளியுறவுச் செயலருக்கு விரிவாக எடுத்துக்கூறினாரெனவும் வடமாகாணத்திலே யுத்ததால் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்தும் நோக்கி லே அங்கு அரசினால் முன்னெடுக்கத்திட்டமிடப்பட்டிருக்கின்ற அபிவிருத்தித்திட்டங்கள் குறித்தும் அவர் சிவ்சங்கர் மேனனிடம் எடுத்துரைத்திருப்பதாகவும் ஜனாதிபதி செயலகம் வெளியிட்டிருக்கின்ற அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நட்புறவு என்றுமில்லாத அளவுக்கு உச்சக்கட்டத்தில் இப்போது இருப்பதாக சிவ்சங்கர் மேனன் ஜனாதிபதியிடம் கூறியிருக்கிறார் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ந-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.